விலைசதம் 20

# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, ஐப்பசி ௨27 செவ்வாய் (12-11-68) ஷஃபான் 20 புத்தகம் 23 இதழ் 5




# சிங்களத்தையும் பௌத்தத்தையும் வடபகுதியில் திணிப்பதற்கு சு. கட்சியின் புதிய சூழ்ச்சி!

## சிறுபான்மைப் பிரமுகர்களை விலைக்கு வாங்கத் திட்டம்

வடபகுதியில் சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணிப்பதற்கு புதிய ஒரு சதித் திட்டத்தைக் கூட்டுக் கட்சிகள் வகுத்திருப்பதாக நம்பகமாகத் தெரியவருகிறது. சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலரை விலைக்கு வாங்கி அவர்கள் மூலம் சிறுபான்மைத் தமிழ் மக்களை பௌத்தத்தை தழுவச் செய்யவும், அவர்களது தமிழ்ப் பெயர்களை எடுத்துவிட்டு சிங்களப் பெயர்களைச் சூட்டவும், ஆங்காங்கே பௌத்த விகாரைகளைக் கட்டவும் தென்னிலங்கையிலிருந்து சிங்கள பௌத்த பிக்குகளைக் கொண்டு சென்று அவ்விடங்களில் குடியேற்றவும் சதித் திட்டம் தீட்டப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இந்நோக்கத்துடன் சென்றவாரம் வடபகுதியிலுள்ள சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகர் ஒருவருக்கு சுதந்திரக கட்சி ஐம்பதினாயிரம் ரூபா வழங்கியிருப்பதாக தெரிகிறது.


வடபகுதியில், சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணிப்பதற்கு சுதந்திரக் கட்சி ஆட்சியிலிருந்தபோது எடுத்த நடவடிக்கைகள் அத்தனையும் முறியடிக்கப்பட்டது தெரிந்ததே.

இப்பொழுது சிறுபான்மைத் தமிழர்களை ஆயுதமாகப் பாவித்து வடபகுதியில் சிங்களத்தையும் பௌத்தத்தையும் திணிப்பதற்கு ஓர் சூழ்ச்சித் திட்டத்தை சுதந்திரக்கட்சி வகுத்திருப்பதாக தெரிகிறது.

சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலரை விலைக்கு வாங்கி, அவர்கள் மூலம் சிறுபான்மைத் தமிழர்களை பௌத்தத்தை தழுவச்செய்யவும், அவர்களை சிங்களவர்களாக இனமாற்றம் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாம். தமிழ் மக்களில் ஒரு சிறு பகுதியினரை என்றாலும், பௌத்த சிங்களவர்களாக மாற்றிவிட்டால் அதன்பின் வடபகுதியில் தமக்கு ஒரு ''பிடி'' கிடைத்துவிடும் என்று சு. கட்சியினர் கருதுகிறார்களாம்.

இதற்காக கடந்த வாரம் கொழும்பில் வைத்து

(9-ம் பக்கம் பார்க்க)




பொதுத்தேர்தலுக்கு அரசியற்கட்சிகள் தயாராகின்றன — செய்தி —

## அரசாங்க ஊழியருக்குள்ள சலுகைகள் ஆசிரியர்களுக்கும் வேண்டும்

### பிரதிநிதிகள் சபைக்கு பிரேரணை வருகிறது!

பாடசாலை ஆசிரியர்களுக்கும் ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு நடைமுறையிலுள்ளது போன்று ஓய்வுச் சம்பளத் திட்டத்தின் படியே ஓய்வுச் சம்பளம் வழங்குவதற்கும், ஏனைய அரசாங்க ஊழியர்களுக்குரிய உரிமைகள் யாவற்றையும் வழங்குவதற்கும் வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது''

—இவ்வாறு கூறும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் பிரேரணையொன்று 1969 சனவரி 5ந் திகதி சனப்பிரதிநிதிகள் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட விருப்பதாக 30-10-68 ல் வெளியிடப்பட்டுள்ள சனப்பிரதிநிதிகள் சபை ஒழுங்குப் புத்தகம் கூறுகிறது.

பண்டிதரின் இப்பிரேரணை ஏற்கெனவே அரசாங்க பாராளுமன்றக் குழுவால் அங்கீகரிக்கப் பட்டிருந்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்படாததால், இலங்கை அரசினர் தமிழ் பாடசாலை ஆசிரியர் சங்கமும் பிற ஆசிரியர் சங்கங்களும் கோரியபடி இப்பிரேரணையை சனப்பிரதிநிதிகள் சபைக்கு திரு. இரத்தினம் கொண்டுவருகிறார்.

## தாழ்த்தப்பட்ட தமிழரிடையே பௌத்த சிங்கள நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட வேண்டுமாம்!

''தாழ்த்தப்பட்ட தமிழர்களின் மத்தியில் பௌத்த சிங்கள நடவடிக்கைகளைத் தீவிரமாகப் பரப்புவதே சிங்கள பௌத்த எதிரிகளுக்கு சரியான பதிலடியாக இருக்கும்''

—இவ்வாறு 'தினபதி'யின், சகோதரஏடான 'தவச' எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் ஒன்றில் கூறியுள்ளது. அத்தலையங்கம் மேலும் கூறுவதாவது:—

'கரவெட்டியில் நடைபெற்ற ஒரு சிரமதான இயக்கத்தின் போது வடக்கில் சிங்களத்தையும் பௌத்தத்தையும் பரப்புவதற்காக நிறுவப்பட்டுள்ள எல்லாப்பாடசாலைகளையும், பொறுப்பேற்கும்படி பிரதமரைக் கேட்கப் போவதாக, வணநாரததேரோ கூறியிருக்கிறார்.

'மிக முக்கிய பௌத்த பிக்குவான அவரது கருத்துக்கு அரசாங்கம் மதிப்பளிக்க வேண்டும். முன்பும் இப்படிப்பல கோரிக்கைகளை அவர் விடுத்திருக்கிறார். அரசியல் காரணங்களுக்காக அவை உதாசீனம் செய்யப்பட்டுள்ளன.'

## மலைநாட்டில் “நாம் தமிழர்” யுத்தப் பயிற்சி செய்கின்றனராம்!

'வெலிமடை, ஹப்புத்தளை, பண்டாரவளை போன்ற இடங்களைப் போலவே மலைநாட்டிலும் நாம் தமிழர் இயக்கத்தினர், வாலிபர்களுக்குயுத்த நடைமுறைப் பயிற்சிகளை அளித்து வருகின்றனர். அரசியல்நோக்கம் ஒன்றை வைத்து இது நடைபெறுவதாக கருதப்படுகிறது.

'விடுமுறை நாட்களிலும், வேலை முடிந்து ஓய்வு நேரங்களிலும், இப்பயிற்சிகள் நடைபெறுகின்றன.

—இவ்வாறு ''லங்காதீப'' அண்மையில் வெளியிட்டிருந்த செய்தியொன்றில் கூறப்பட்டுள்ளது.

இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட நாள் உயிர் வாழும் இரகசியம் என்ன?

பேராசிரியர் ஸ்பெரான்ஸ்கி

நமது வாழ்க்கை ஒரு முக்கிய நிபந்தனையின் பேரில் வழங்கப்பட்டிருக்கிறது; அதாவது ஒவ்வொரு நாளும் அந்த வாழ்க்கையை நாம் பாதுகாத்தாக வேண்டும்.

நமது உடலில் எல்லா நேரத்திற்கும் 'தன்னைத் தானே எரித்துக் கொள்ளும் செயல் நடைபெற்ற வண்ணம் இருப்பதை நினைவிற் கொள்ள வேண்டும். சில பொருட்கள் அழிக்கப்படுகின்றன; வேறு சில அவற்றின் இடத்தை அடைகின்றன.

மனித உடலானது விசேஷ சூத்திரங்களின் மூலம் கணக்கிடக் கூடிய வகையில் படிப்படியாகத் தேயவும் உடையவும் கூடிய எந்திரமல்ல.

மூளை உழைப்பையும் உடல் உழைப்பையும் எவ்வாறு மாற்றிக் கொள்வது என்பதைக் கற்றுக் கொள்ளாததனுலேயே, உடற் பயிற்சிகளின்பால் வெறுப்பான போக்கைக் கடைப்பிடிப்பதனுலேயே, அருமையானவர்கள் பலர் இளமையிலேயே மாண்டு போகின்றனர். உடற் பயிற்சிகள் வெறும் பொழுது போக்கல்ல. காலையில் ஐந்து நிமிடங்கள் அதற்காகச் செலவிடுவது லாபகரமான முதலீடாகும்,

நீங்கள் உங்களுடைய அறுபது அல்லது எழுபதாவது ஆண்டுகளில் இருந்தாலும் கூட உடற் பயிற்சிகளைத் தொடங்குவதில் தவறில்லை. ஆனுல் நீங்கள் முதலில் ஒரு டாக்டரைக் கலந்து ஆலோசனை பெற வேண்டும்!

பொருளாயத மற்றும் மனி நிலைத் தேவைகளின் முழு நிறைவு ஆகியவை மனித குல ஆயுள் நீடிப்பின் அடிப்படை என்பது ரகசியமல்ல.

ஆனுல் நீண்ட ஆயுள் என்பது உழைப்பில் இருக்கிறது. சகஜமான நரம்பு மண்டல அழுத்தமும், இடையருத பயிற்சியும் எல்லா உயிரினங்களுக்கும் உதவுகிறது. அண்மையில் வெள்ளை எலிகளைக் கொண்டு தொடர்ச்சியான பரிசோதனைகள் நடைபெற்றிருக்கின்றன. அந்த எலிகள் ஒரு கம்பத்தில் ஏறும்படி நிர்ப்பந்திக்கப்பட்டன.

ஒரு குறிப்பிட்ட கால பயிற்சிக்குப் பிறகு உயிர் கொல்லி, கதிரியக்கத்திற்குள் விடப்பட்டன. பயிற்சி பெற்ற எலிகள் தப்பித்துக் கொண்டன: பயிற்சி பெருத எலிகள் இறந்து விட்டன.

இதில் ஏதேனும் ரகசியம் இருக்கிறதா? ஆம்; இருக்கிறது. பிராணவாயு வளர்சிதை மாற்றம்! வாழ்வின் ஆதாரமான பிராணவாயு பயிற்சி பெற்ற உடலில் அதிக வலிமையுடன் 'வேலை' செய்கிறது.

நீண்ட ஆயுள் என்பது தானுகவராது—அதற்காகப் போராடியாக வேண்டும்.

அனைவருக்கும் உடற் பயிற்சி அளிக்க வேண்டும்—அது தான் நோய்களைத் தடுக்கும் அடிப்படை என்று என்கருத்தில் படுகிறது. நோய்கள் நீண்ட ஆயுளுக்குப் பரம எதிரிகள். இருதயத்திலோ அல்லது ஈரலிலோ ஏற்படும் நோய், உடலுறுப்புகள் அனைத்தின் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது.

வயதானவர் நடக்க முடியாத ஒரு நிலையினுல் பாதிக்கப்படுகிருர்கள். இதற்கு சுகமளிக்கும் உடற் பயிற்சிகளை முறையாக மேற்கொள்வது ஒன்றே தான் சிறந்த மருத்துவமாகும்.

ஏன்? இந்த நிலைமை வளர்சிதை மாற்றத்திற்கு இடையூறு ஏற்படுவதினுல் விளையும் தாது உப்புக்களின் சேர்க்கையிலிருந்து உருவாகிறது.

தாதுப் பொருட்கள் கலந்து தண்ணீரால் இதனைக் குணப்படுத்த முடியாது என நிருபணமாயிற்று. ஆனுல் உடற் பயிற்சிகள் மிகுந்த பலனை அளிக்கின்றன. 50-60 வயதானவர்கள் நினைவாற்றல் குறைவு, விரைவில் களைத்துப் போதல் நடுங்கும் இதயம், சின்னஞ்சிறு வேலை செய்தாலும் மூச்சுத் திணறுதல் ஆகியவை பற்றிக் குறைப்பட்டுக் கொள்வதைக் கேட்டிருக்கிறேன்.

அந்த மாதிரிச் சமயங்களில் ஒருவர் தனக்குத் தானே 'முதுமை வந்து விட்டது' என்று சொல்லிக் கொள்கிருர், ஆனுல் இத்தகைய முதுமையை டாக்டரில்லாமலே குணப்படுத்தலாம்! பல வியாதிகள் குறிப்பாக இந்த நூற்ருண்டின் வியாதி எனப்படும் ஏதரோஸ் கிளிரோசிஸ் போன்றவை வளர்சிதை மாற்றக் கோளாறுகளால் உண்டாகின்றன. இந் நோய்களுக்குக் காரணமான கோளாறுகள். நோயாளி விளையாட்டை மேற்கொள்ளத் தொடங்கும்போது மறைந்து விடுகின்றன என்று ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

### உழைப்பும் நீண்ட ஆயுளும்

இயற்கையின் திட்டப்படி மனிதன் எவ்வளவு காலம் வாழ முடியும்? சில தாவரங்கள் மற்றும் விலங்குகளின் நீண்ட ஆயுளைப் பற்றி விளக்க இன்னும் விஞ்ஞானத்தில் முடியவில்லை.

அமெரிக்க 'சிகியோயா' (கலிபோர்னிய முரட்டுமரம் சில சமயங்களில் வெலிங்டோர்னியா என்றும் அழைக்கப்படுகிறது) என்ற மிகப் பெரிய மரவகைகள் சுமார் ஆயிரம் ஆண்டுகள் வாழ்கின்றன. ஆமைகள் 300 வருடங்களும், திமிங்கிலங்கள் 400 வயதில் தான் சாவதற்காக நீரைவிட்டு வெளியேறுகின்றன என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனுல் ஏன்?

இந்த விடை சந்தேகத்திற்கிடமின்றி மற்ருெரு கேள்விக்கும் விடை கூறுகிறது. கிழ வயது என்ருல் என்ன?

தனி நபரின் நீண்ட ஆயுள், வாழ்க்கையின் தனிப்பட்ட நிலைமைகளைச் சார்ந்து உள்ளது. பொருளாதார வசதிகள், வேலை மற்றும் பொழுது போக்கு நிலைமைகள் சுகாதார வசதிகள், வீட்டுக் கலாசாரப் பழக்கங்கள் இவையாவும் காரணமாக அமைகின்றன. ரஷிய நாட்டில் 1913-ல் சராசரி மனித ஆயுள் 32 ஆக இருந்தது; அதை 1968-ல் 70 ஆக உயர்த்துவதில் வெற்றி கண்டிருக்கிருர்கள்.

குறைந்த வேலை நேரம், வசதியான குடியிருப்பு, உயர்ந்த கலாசாரத் தரம் கல்லாமையை அகற்றுதல்,

# கவிதைப் பூங்கா

## அழகு

ஆரையம்பதி ஆ தங்கராசா.

துறவிக் கழகு ஞானமன்ருே—உயர்
    தமிழுக் கழகு ழகரமன்ருே!
பிறப்புக் கழகு இறப்பதன்ருே—உயர்
    பெண்ணிற் கழகு நாணமன்ருே!
குறத்திக் கழகு பாடலன்ருே—உயர்
    கவிஞனுக் கழகு மெய்மையன்ருே!
மறத்திக் கழகு வீரமன்ருே—உயர்
    மானுக் கழகு துள்ளலன்ருே!

கடலுக் கழகு ஓசையன்ருே—உயர்
    கன்னிக் கழகு மானமன்ருே!
மடலுக் கழகு மணத்தலன்ருே—உயர்
    மாரிக் கழகு பொழிதலன்ருே!
குடலைக் கழகு பூக்களன்ருே—உயர்
    கோயிலுக் கழகு தெய்வமன்ருே!
காட்டுக் கழகு சோலையன்ருே—உயர்
    காதலுக் கழகு உள்ளமன்ருே!

## அவள்

—கல்முனைப் பூபால்

கூனற் பிறைஉயர் வானகத்தில் நின்று
கூட்டும் ஒளியின் நற் சேர்க்கையிலே—நெஞ்சத்
தானத்தி லேநறும் பாலொளி சேர்ந்திடர்
தாவி அழிக்குமப் போதினிலே—தமிழ்க்
கான மிசைத்துக் கவிக்குயில் என்னுடல்
கன்றிப் புதுமெரு கேற்றிவிட்டு—உலைப்
பானையிலே கொதி நீரதன் பான்மையில்
பாடல் இயற்றப் படைத்து விட்டாள்!

வாழையிலும் கடற் தாழையிலும் நீல
வானில் ஒளிர்ந்திடு மீன்களிலும்—தினம்
காலையிலேவிரி சோலை மலர்களிற்
கண்கள் சிமிட்டிஎன் காதருகே—அவள்
கோலச் சிவந்த இதழ்கள் பிரித்தெனைக்
கொஞ்சிடும் பான்மையிற் பாடல்தந்தாள்—அதைப்
பாழும் உலகினிற் கூவுகிறேன்; அவள்
பாவல் விதைஇதழ் தேடுகிறேன்!

நித்த மெனவந்து கொத்தும் கிளியென
நித்திரை செய்கின்ற போதினிலும்—நெஞ்ச
மெத்தையிலே எழிற் கட்டுடலம் வைத்து
மெய்யுணர் வேற்றுபண் பாடுகிருள்—இணை
அத்திடும் போதெனைப் 'பாடு தொடர்'நதென
தன்மைக் கரங்களை நீட்டுகிருள்—கவிச்
சித்திரமே; உன்றன் செய்கைகள் காண்கையில்
சிந்தை மயங்கித் திணறுகிறேன்!

## துருவங்கள்....??

—யுவன்—

இடுப் புடைபட எருமைகளோட்டியே
இரவு பகலெலாம் எண்ணம் 'வயல்' என
கடுங்குளிரிலும் கத்தும் மழையிலும்
கண்கள் பொங்கிடும் வெப்ப நிலையிலும்
நடுங்கியேபணி செய்யும் உழவரின்
நாட்டம் விளைவிலே—நோட்டுக்க ளுள்ளவர்
பிடுங்கும் நோக்குடன் உழைப்பை யுறிஞ்சவே
பெரிய திட்டத்தில் ஊறுவார் நெஞ்சிலே......!!

அற நெறிகளை அவனியிலெங்குமே
அள்ளித் தூவியே ஆனந்தம முற்றிடும்

திறனு ளோர்நிறை தேசத்தி லெங்கணும்
தீயின விழியுடை திருட்டி னுருவினர்
மற முறைகளை மாசுறு நோக்குடன்
மறைத் திறைப்பதில் மகிழ்ச்சி யடைகிருர்
உறவுக் கொரு சக்தி உழைக்குமிந் நாளிலே
உருக் குலைக்கும் பகையும் வளருதே!!

வானைக் கடலை வளையும் உலகினை
வாழும் உயிர்களை வளம் படுத்தியே
ஆணைக்குள்ளாக்கிய ஆண்டவன் நாமத்தை
ஆவலோடு புகழ்பவர் ஆயிரம்!!
பேன், முடிக்குள் தானே நுழைத்திடும்
பெரிய சீப்பினைப் போன்ற ஒரு சிலர்
ஊனைப் படைத்தோன் ஒழிகவே என்கிருர்
உலக நியதியின் துருவங்களாகிருர்.!!

# கேட்டதும் ரசித்ததும்

எழுதுபவர் "ஆசரீரி"

இசை இன்பத்தைக் கேட்டு மரஞ்செடிகள் கூட வளர்ச்சியடைகிறது என மேல் நாட்டவர் கூறும் பொழுது இ. ஒ. ப. கூ. தாபனத்தின் நிகழ்ச்சிகளைக் கேட்டுக் கேட்டுப் பலருக்குத் தலையிடி பிடித்து வருவதாக நமது ஒற்று நிருபர் கூறுகின்ருர்.

வண்ணத் தமிழ் என்று பெருமை கொள்ளும் எமது இன்பத் தமிழ் இலங்கைப் புகையிரதப் பகுதியில் கொலைசெய்யப்படுகிறது. கோட்டைப் புகையிரத நிலயத்திலும் மருதானைப் புகையிரத நிலயத்திலும் புகை வண்டிகள் புறப்படும் நேரங்கள் மூன்று மொழிகளிலும் அறிவிக்கப்படுகின்றன.

''மூன்ரும் மேடையில் இருக்கும் பிரேதம் மொறட்டுவ பிரப்படும்''— தமிழ் தெரியாத ஒருவர் தன் மொழியில் எழுதி வாசிக்கும் இத்தொனியை நேரில் கேட்டால் 'ஐயோ தமிழே, உன் நிலை இதுவா?' என்று அழத்தான் நேரிடும். தமிழ் அறிவித்தலை, ஒரு தமிழரைக் கொண்டு செய்வித்தால் 'புகையிரதம்' 'பிரேதம்' ஆகுமா? புறப்படுவது, பிரப்படுமா?

இ. பொ. ச. என்ருல் இயமன் போகும் சவாரி என்பது அர்த்தமாகிவிட்டது. உள்ளுக்கிருந்தாலும் ஆபத்து......வீதியில் நடந்து சென்ருலும் ஆபத்து...... கடந்த ஆண்டு விபத்திலே செத்தவர்களில் பெரும்பான்மைக்குக் காரணம் இந்த இயமன் போகும் சவாரிதானும்!

இ. போ. ச.வின் வீரப் பிரதாபங்கள் எமக்குத் தேவையில்லை. வரும் ஆண்டில் இலங்கையில் உள்ள எல்லோரையும் ஒரேயடியாகத் தீர்த்துக்கட்டி விட்டாலும் எமக்குப் பாதகமில்லை. இலங்கையின் உணவுப் பிரச்சினை ஓரளவாவது தீர்ந்துவிடுமல்லவா? ஆனுல்...'கொட்டை' என்ற விளம்பரத்தோடு வரும் வாகனம் எங்கு போகின்றது என்றுதான் தனித் தமிழ் தெரிந்த கொழும்புப் 'பஸ்' பிரயாணிகளின் ஏக்கம்! தமிழர்களுக்கு அவமானத்தைக் கொடுக்கும் இத்தகைய அம் மணத்தை இ. பொ. ச. விளம்பரத்தில் எழுதுவது நிச்சயம் ஒரு தமிழராக இருக்கமுடியாது — கோட்டைக்கும் கொட்டைக்கும் வித்தியாசம் நிறைய உண்டு.

'நாய் கல் கடிக்கும் கவ்வும்'—நாய் [illegible]

எமக்கு நட்டம் ஒன்றுமில்லை. நாயின் பல்லுக்குத்தான் நட்டம். சில கொழும்புத் தமிழர்களின் வீட்டு வாசலில் 'நாய் கல் கடிக்கும்...!' விளம்பரப் பலகையை தொங்குவதைக் கண்டால் அது தமிழுக்கு நட்டம். தமிழின் அழகுக்குக் கேடு என்பதனுல் இத்தகைய பலகைகள் எல்லாம் கழற்றித் தூர வீசப்பட வேண்டும்.

'ஹலோ மிஸ்... ஹலோ மிஸ்... எங்கே போறீங்க... கொஞ்சம் நில்லுங்க... காதலிக்க நேரமில்லை...? காதலிப் போமா...? கொழும்பு 'வாசிற்றி' பெடியள் பஸ் தரிப்பிலே (பண்டத் தரிப்பு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. இராமநாதன்,
யாழ்ப்பாணம்.

கே: மரியாதைக் குறைவான வார்த்தைகளை எங்கு அளவுக்கதிகமாக கேட்கலாம்?

ப: வடபகுதியில் ஓடும் இ. போ. ச. பஸ்களில் கண்டக்டர்களின் வாயிலிருந்து சரளமாக கேட்கலாமே!

எஸ். சரஸ்வதி,
சங்கானை.

கே: சென்னை கார்ப்பரேஷன் தேர்தலில் தி. மு. க. வெற்றியின் பெருமை யாருக்குரியது?

ப: எம். ஜி. ஆருக்கு!

ஃ

இம்மனுவேல்,
நேரியகுளம்.

கே: தனிப்பெருந் தலைவர் பொல்லுடன் திரிவதின் காரணம் என்ன?

ப: வெறுப்படைந்துள்ள மக்களிடமிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காகவே அப்படி திரிவதாக கருதுகிறீரோ?

கே: வவுனியாப் பிரதிநிதி சிவசிதம்பரம் அவர்களுக்குப் பண்டார வன்னியன் நினைவு இருந்தாற்போல் உதித்த காரணம் யாதாக இருக்கலாம்?

ப: தேர்தல் நெருங்குவதை மறந்துவிட்டீர் போலும்!

ஃ

ம. ரஜனி,
பெனிதுடுமுல்லை.

கே: சில காதலர்கள் தங்கள் காதலி இன்னொரு ஆணுடன் பேசும்போது சந்தேகப்படுகிறார்களே!

ப: அப்படிப்பட்டவர்கள் சூடுபட்ட பூனைகளாக இருக்கலாம்!

ஃ

கந்த ஞானமுத்து,
கைதடி, தெற்கு,

கே: இலங்கையை சமஷ்டியின்கீழ் மூன்று ராஜ்யங்களாகப் பிரிக்கப் போகிறார்களாமே?...

ப: தமிழ்மக்கள் தொடர்ச்சியாக சமஷ்டிக் குரல் கொடுத்தால்அது நடக்கும்!

ஃ

பி. யோகானந்த்,
உடுப்பிட்டி.

கே: தனிப்பெரும் தலைவர் அவர்களுக்கு ''அவர் செய்யும் புரட்டல்களுக்காக எங்கள் ஊரில் வைத்து பகிரங்கமாக ''பொன்னாடை'' போர்த்தப் போகிறேன்? அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: அத்துடன் 'புரட்டர் திலகம்' என்ற பட்டத்தையும் அளித்துவிடுங்களேன்!

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: கிளிநொச்சி பட்டின சபை விவகாரத்தில் முன்பு தலையிட்டு மூக்குடைபட்ட தனிப்பெரும் தம்பிரான் ஜீ. ஜீ, மீண்டும் தலையிடுவதன் காரணம் என்ன?

ப: உடைந்தமூக்குமேலும் உடையத்தான்!

கே: தினம் தினம் செய்திகளை கயிறு திரித்து வெளியிடும் தினபதி பத்திரிகையின் அந்தரங்க நோக்கம் யாது?

ப: தமிழ் மக்களின் ஐக்கியத்தைக் குலைத்து விடுவது தான்!

ஃ

க. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: நண்பன், என்றான் அன்பன் என்றான் தற்போது பகைவன் என்கிறான் ஒருவன். இவனை எப்படி அழைக்கலாம்?

ப: கம்யூனிஸ்ட் என அழைக்கலாமே! செக் பிரச்சினையில் ரஷியா இப்படித் தானே நடந்துகொண்டது!

ஃ

இ. இராஜ்,
நாவல்நகர்.

கே: பொதுத்தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதிலும், பொதுமேடைகளில் பேசும்போது ஒற்றுமையைப் பற்றியும் பேசுகின்ற தனிப்பெரும் தலைவரின் அரசியல் ஞானம் அஸ்தமித்துவிட்டது என்கின்றேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: உங்கள் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது. அரசியல் ஞானம் இருந்தாலல்லவா அஸ்தமிப்பதற்கு?

கேயெஸ்,
அக்கரபத்தனை.

கே: ஜி.ஜி. ஒருகூட்டத்தில் பேசுகையில் என்னருமைத் தமிழ் மக்களே அழகுவார்த்தைகளால் இனி உங்களை யாரும் ஏமாற்றிவிட முடியாது. என்று கூறியிருக்கின்றாரே! இது எதைக் காட்டுகிறது!

ப: வார்த்தை ஜாலங்களால் இதுவரை தாம் ஏமாற்றிவந்ததுபோல இனியும் ஏமாற்றமுடியாது என்பதை அவர் உள்ளூற உணர்ந்திருக்கிறார் என்பதை!

ஃ

வி. பி. ஆர். இரத்தினம்,
கொழும்பு-13.

கே: வட்டுக்கோட்டை பா. உ. திரு. அமிர்லிங்கம் அவர்களின் பாரியார் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவார் என்பது உண்மையா?

ப: உண்மையல்ல!

ஃ

தி. பாலக்குமார்,
கொழும்பு-13.

கே: சுகாதார மந்திரியின் யாழ் விஜயத்தின்போது நடைபெற்ற வரவேற்பில் தமிழரசார் கலந்துகொள்ளாததேன்?

ப: அழைப்புக் கிடைக்காததே காரணம் என்று தமிழரசுப் பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் விளக்கமளித்திருந்தாரே!

ஃ

'ஸ்ரீதரன்'
கோண்டாவில் கிழக்கு.

கே: சென்னை மாநகர தேர்தலில் தி.மு.க. வெற்றி அடைந்தது எதைக் காட்டுகின்றது?

ப: காங்கிரசிடம் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க மக்கள் விரும்பவில்லையென்பதை!

'நடமாடி'
மடுல்சீமை.

கே: ஏழை ஒருவன் செய்யாத பிழைக்கு தண்டிக்கப்படுகிறான். ஆனால் பிழை செய்த பணக்காரனோ— தண்டனைக்கு ஆளாகவில்லையே!

ப: பணக்காரனிடம் இருக்கும் பணம் ஏழையிடம் இருப்பதில்லையே!

ஃ

வே. குணாளன்,
கைதடி.

கே: நீர் இந்த நாட்டின் சர்வாதிகாரியானால்முதலில் என்ன செய்வீர்?

ப: பெண்கள் மினிஸ் கேர்ட் அணிவதற்குத் தடை போடுவேன்!

ஃ

சண்முகம்,
திருகோணமலை.

கே: ஜீ. ஜீ. பேரில் உங்களுக்கு ஏன் இந்த 'அன்பு'?

ப: அவர் திருத்தமான அரசியல் பாதையில் நடக்க வேண்டும் என்பதால்தான்!

ஃ

ந. பொ. நல்லையா,
சாவக்கட்டு.

கே: வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்கள் தமிழ் அரசில் அதிக நம்பிக்கை வைத்திருப்பது ஏன்?

ப: நிலையான கொள்கையும் குலையாத உறுதியும் கொண்டதாக தமிழரசுக் கட்சி விளங்குவதால்!

ஃ

வே. நவரத்தினம்,
கரணவாய் தெற்கு.

கே: தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யும் கல்வி மந்திரிமீது எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் ஏன் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவாக வாக்களித்தது?

ப: துரோகத்திலிருந்து திருந்துவதற்கு கடைசிச் சந்தர்ப்பம் அளிப்பதற்காக!

ஃ

மு. நடேசன்,
கைதடி வடக்கு.

கே: தற்பொழுது, ஸ்ரீ வெங்கடாசலபதியின், கலியுக அவதார அற்புதம்பற்றி, பெரும்பான்மையான மக்கள், பல நோட்டீஸ் மூலம் பிரசுரம் செய்து, பலருக்கும் தெரியபபடுத்துகின்றனர். எனவே இதைப் பற்றி உங்கள் கருத்து யாது?

ப: அச்சுக் கந்தோர் வைத்திருப்பவர்களுக்குவெங்கடாசலபதியின் கடாட்சம் ஏற்பட்டிருக்கிறது போலும்!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு.

கே: திரு. பொன்னம்பலம் அடுத்த தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடமாட்டாராமே இதன் மர்மம் என்ன?

ப: தமிழ் மக்கள் முகத்தில் கரிபூசிவிடுவார்களோ என்ற அச்சம்தான்!

கே: என்னுடைய கையெழுத்திலிருந்து என்னைப்பற்றி நீங்கள் அறிவதென்ன?

ப: நீங்கள் நிதானம் தவறுதவர்.

கே: தமிழினத்துக்குச் சேவை செய்வதாகப் பீற்றிக்கொள்ளும் தமிழ் காங்கிரஸார் ஏன் இன்னும் அரசாங்கத்துடன் ஒட்டிக் கொண்டிருக்கின்றனர்?

ப: யூ. என். பி.யின் தமிழ்ப் பதிப்புத்தானே தமிழ் காங்கிரஸ். அது வெளியேறுவது என்பது கேலிக்கூத்தாகவல்லவா முடியும்?

ஃ

'கேயெஸ்'
அக்கரபத்தனை.

கே: பிரதிநிதிகள் சபைக்கு நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஒரு அபேட்சகருக்கு எத்தனை வயது இருக்கவேண்டும்? மேலும் போட்டியிடும் அபேட்சகருக்கு இருக்க வேண்டியதகமைகள் என்ன?

ப: மேஜராக இருந்தால் போதும்! மற்றப்படி வேண்டிய தகுதிகள் எல்லாம் பணம்தான்!

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: எம்.ஜி.ஆர். இரகசியமாக இலங்கை வருகிறாராமே உண்மையா?

ப: இரகசியமாக வருவதற்கு அவர் ஒரு பயங்கரவாதி யல்ல.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12



**பு**திய தமிழ்க் கட்சியொன்று உருவாக்கமுயற்சி
—செய்தி

—(தேர்தல்) மழை பொழியப் போகிற தென்றவுடன்காளான்கள் தோன்றுவதில் வியப்பென்ன?

**வெ**ங்காய இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படும்.
—செய்தி

—இங்குள்ள சில அரசியல் வெங்காயங்களை ஏற்றுமதியும் செய்யலாமே!

**செ**ன்னையில் தமாஷாவரியை எதிர்த்து வழக்கு.
—செய்தி

—சரியான ''தமாஷ்'' என்கிறார் ஒரு வழக்கறிஞர்.

**பு**திய சம்பளக் கமிஷன் விரைவில் நிறுவப்படும்.
—செய்தி

—சம்பள உயர்வு கேட்போரை தாலாட்டித் தூங்கச் செய்யும் தொட்டில்தான் கமிஷன் என்கிறார் ஓர் அரசாங்க ஊழியர்.


**இ**ந்தியத் தபால்கள் தாமதமாகும் —செய்தி

—கால தாமதமின்றி எப்போது நடைபெற்றது என்று கேட்கிறார் ஓர் இந்திய அன்பர்.

**வி**வசாய மன்னர் தேர்தலில் நிற்பர்? —செய்தி

—இனி விவசாயத்துக்கு அரோகராதான் என்கிறார் ஒரு விவசாயி!

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னைக் கடிதம்:

# தாயகம் திரும்பிய அறிஞர் அண்ணாவுக்கு சென்னை அளித்த குதூகல வரவேற்பு



அமெரிக்காவில் 55 நாட்கள் தங்கிச் சிகிச்சை பெற்ற தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா இம் மாதம் 6-ம் திகதி காலை விமான மூலம் சென்னை திரும்பியபோது குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அலை அலையாகத் திரண்டு வந்த தமிழர் கூட்டம் அண்ணாவை வரவேற்பதற்காக விமான நிலையத்திலிருந்து அண்ணா வீடு செல்லும் சாலையெங்கும் திரண்டு நின்று வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

"அண்ணா நீடூழி வாழ்க" என்ற கோஷம் வானைப் பிளக்க, அறிஞர் அண்ணா மலர்ந்த முகத்துடன் இரு கைகளையும் கூப்பி வணக்கம் தெரிவித்தபடி விமானத்திலிருந்து இறங்கி வந்த காட்சி மெய் சிலிர்க்க வைத்தது.

திரு. அண்ணாதுரையை வரவேற்க மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அதிகாலையிலிருந்தே மக்கள் திரளாகக் குழுமிவிட்டனர். விமான நிலையத்திற்குள் செல்வதற்கு 'பாஸ்' மூலம் அனுமதி கட்டுப்படுத்தப்பட்டிருந்தும், ஆயிரக்கணக்கான மக்களும் கழகக் கொடியைத் தாங்கிய வண்ணம் தி. மு. க. தொண்டர்களும் விமான நிலையத்திற்குள்ளேயும், வெளியேயும் திரண்டிருந்தனர்;

முதலில் கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் மாலையிட்டு அண்ணாவை வரவேற்றார். அயல்நாடு சென்றுள்ள அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து தவிர மற்ற அமைச்சர்கள் அனைவரும் பின்னர் கரம் கூப்பி வரவேற்றனர்.

## திறந்த ஜீப்பில்...!

திரு. அண்ணாதுரை பின்னர் பிரம்பு நாற்காலியும், அதன் மீது அழகிய குடையும் பொருத்தப்பட்டிருந்த திறந்த ஜீப் காரில் மந்திரி சபை சகாக்கள், நடிகர்கள் எம். ஜி. ராமச்சந்திரன், எஸ். எஸ். ராஜேந்திரன் ஆகியோர் உடனிருக்க விமான நிலையத்திலிருந்து நுங்கம்பாக்கம் அவென்யூ ரோட்டில் உள்ள தமது இல்லத்திற்குப் புறப்பட்டார்.

விமான நிலையத்தில் கூட்டத்தினரைக் கட்டுப்படுத்த இரும்புத் தொப்பி அணிந்த போலீஸார் நிறுத்தப்பட்டிருந்தார்கள். அண்ணா ஜீப் காரில் புறப்பட்டதும் கூட்டத்தில் இருந்தவர்கள் கழகக் கொடியை அசைத்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டனர்.

விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட அண்ணா சுமார் ஒன்றரை மணி நேர பவனிக்குப்பின் நுங்கம்பாக்கத்தில் உள்ள தமது இல்லத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவென்யூ ரோட்டில் காலை முதலே மக்கள் பெருந்திரளாகக் கூடி விட்டதால், அந்தப் பகுதியில் போக்குவரத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் உள்ள பிளாட்பாரங்களில் சவுக்கு மரங்களால் வேலி கட்டப்பட்டு மக்களின் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

### மங்கள ஆரத்தி

அறிஞர் அண்ணா ஜீப் காரை விட்டு இறங்கி வீட்டு வாசலுக்குள் சென்றதும் அவருடைய, இரண்டு மருமகள்களும் மற்றும் பல பெண்களும் கற்பூர ஆரத்தி எடுத்து நெற்றியில் திலகமிட்டனர். பின்னர் திருஷ்டி கழித்து சுற்றிய தேங்காய் உடைக்கப்பட்டது.

வாசலில் கூடியிருந்த கூட்டத்தினரைக் கட்டுப்படுத்திய, பின் போலீஸார் அண்ணாவை வீட்டிற்குள் அழைத்துச் சென்றனர்.

வீட்டிற்குள் சென்ற முதலமைச்சரை முதன் முதலில் பார்த்து வாழ்த்துக் கூறியவர்கள் பத்திரிகை நிருபர்கள் தான். மிகவும் எளிய முறையில் வேஷ்டியும், சட்டையும் அணிந்து மேலே துண்டு போட்டுக் கொண்டிருந்த முதலமைச்சர் புன்முறுவலுடன் 'ஓய்வு எடுத்துக் கொண்டு அதன் பின்னர் செய்தி விடுக்கிறேன்' என்று கூறினார்.

எந்த நேரத்திலும் உதவி செய்வதற்காக திரு. அண்ணாதுரையின் வீட்டில் நர்ஸ் உட்பட ஒரு வைத்தியக் குழுவினர் தயாராக வைக்கப்பட்டுள்ளனர்.

### ராஜாஜி வாழ்த்து

அண்ணாவுக்கு முரசொலி மாறன், எம். பி. மூலமாக ராஜாஜி கீழ்க்கண்ட செய்தியை அனுப்பியுள்ளார்.

"அன்பார்ந்த அண்ணா, தாங்கள் நாடு திரும்பியதற்கு என் மகிழ்ச்சி. தங்களை நான் வரவேற்கிறேன்".

சென்னை வரவேற்பின் பின்னர் அண்ணாவும் அவரது குடும்பத்தினரும் அண்ணாவின் சொந்த ஊரான காஞ்சீபுரம் சென்றனர்.

இல்லத்தில் 80 வயதான தாயைச் சந்தித்து மட்டில்லா மனமகிழ்ச்சியை அனுபவித்தார் அண்ணா. அங்கு அன்னையின் மகிழ்ச்சிக்கும் அளவில்லை.

வீட்டுக்கு வந்ததும் 'வீடு திரும்பியதும் மகிழ்ச்சி எய்தினேன். தாயைக் கண்டு அளவிலா ஆனந்தம் அடைந்தேன்' என்று கூறினார்.

நியுயார்க்கில் அனுபவித்த மாட மாளிகைகளை விட, காஞ்சியிலுள்ள சிறு வீட்டிடம் அவருக்கு அன்பு அதிகம். அவருடைய உடல்நிலையைக் கருதி இங்கு குளிர்சாதனம் பொருத்தப்பட்டிருந்தது.

முதல் மந்திரி அண்ணா வீட்டருகில் ஏராளமான கூட்டம் இருமருங்கிலும் நின்று கொண்டிருந்தது. 'வாழ்க அண்ணா' என்ற வாழ்த்தொலி எங்கும் நிரம்பியது.

கல்யாண பூசணிக்காயில் கர்ப்பூரம் ஏற்றி திருஷ்டி கழித்தனர். ஆரத்தி எடுத்த பின் திரு. அண்ணாதுரை வீட்டுக்குள் சென்றார். வீட்டு வாசலில் சிறிது நேரம் புன்னகை மலர, கரங் குவித்து மக்களின் ஆரவாரமான வரவேற்பை ஏற்றார் அண்ணா.

# அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன்!

அகில உலகமும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட ரிச்சார்ட் நிக்சன் வெற்றியீட்டி விட்டார். எட்டு ஆண்டுகளின்பின் அமெரிக்க ஜனாதிபதி பதவி குடியரசுக் கட்சிக்கு கிடைத்திருக்கிறது.

புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்கவிருக்கும் நிக்சனை பெரும் பிரச்சினைகள் எதிர்நோக்கியிருக்கின்றன. உள்நாட்டில் எரிமலையெனக் குமுறிக்கொண்டிருக்கும் கறுப்பர்கள் பிரச்சினை, மற்றும் சமூகப் பிரச்சினைகளும் வெளிநாட்டில் வியட்னாம் யுத்தம், போன்ற பிரச்சினைகளும் அமெரிக்காவை பயமுறுத்தி வருகின்றன.

வியட்நாம் யுத்தம் எப்படி ஒரு முடிவுக்கு கொண்டுவரப்படவிருக்கிறது என்பதையும், கறுப்பர்கள் விடயத்தில் பின்பற்றப் போகும் கொள்கை எப்படி அமையப்போகிறது என்பதையுமே, நிக்சனிடம் அமெரிக்க மக்கள் மட்டுமன்றி உலக மக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

அத்துடன் ரஷியாவுடனான நிக்சனின் இராஜதந்திரத் தொடர்பு எப்படி அமையப் போகிறதென்பதையும் சீனாவை எப்படி 'சமாளிக்க' போகிறார் என்பதையுமே உலகம் கூர்ந்து அவதானித்து வருகிறது.

### வாழ்க்கைக் குறிப்பு

ரிச்சார்ட் மில்ஹவுஸ் நிக்சன் 1913 ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி கலிபோர்னியா மாநிலத்திலிருக்கும் யோர்பா லிண்டா என்ற ஊரில் பிறந்தவர். பிராங்க் நிச்சன்— ஹன்னா நிக்சன் தம்பதியினருக்கு 5 பிள்ளைகளில் இரண்டாவதாகப் பிறந்தார். ஒன்பதாவது வயதில் அவருடைய குடும்பம் விட்டியா என்ற ஊர் சென்று குடியேறியது. அவருடைய தந்தை அங்கு ஒரு மளிகைக் கடையையும் பெற்றோல் விற்பனை நிலையத்தையும் நடாத்தினார். தனது கல்லூரிப் படிப்புக் காலத்தில் அவருடைய தந்தையின் வர்த்தகங்களைப் பார்த்துக் கொண்டே நிக்சன் விட்டியா கல்லூரியில் படித்துவந்தார் அதே கல்லூரியில் பயின்று 1934ம் ஆண்டில் சிறப்புப் பட்டம் வாங்கினார்.

வட கரோலினா மாநிலத்தில் டர்ஹாம் நகரில் இருக்கும் டியூக் பல்கலைக் கழக சட்டப் பள்ளியில் படிக்க அவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. 1937ல் சட்டத்தில் சிறப்புப்பட்டம் பெற்றார்.

### இரண்டாவது உலகப் போரில்!

இரண்டாவது உலகப் போரின்போது அமெரிக்கக் கடற்படையில் சேர்ந்து 13 மாதங்கள் வரை கடமையாற்றினார். போர்க்காலங்களில் அவருடைய சேவையை பாராட்டி பதக்கங்களும் பாராட்டு இதழ்களும் வழங்கப்பட்டன. பின்னர் லெப்டினண்டாக உயர்ச்சி பெற்று 1946ம் ஆண்டில் இராணுவத்திலிருந்து விலகிக் கொண்டார்.

அதே ஆண்டு நடைபெற்ற தேர்தலில் கலிபோர்னியாவிலிருந்து அமெரிக்கச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948ம் ஆண்டும் தேர்வானார். பின்னர் 1950ம் ஆண்டு மேல் சபையான செனட்டில் இடம் பிடித்துக் கொண்டார்.

(9-ம் பக்கம் பார்க்க)



புதிய அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டுள்ள நிக்சன் குதூகலத்துடன் துணை ஜனாதிபதியாக வரவிருக்கும் ஸ்பிரோ ரி. ஆக்நுவுடன் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தங்குமடம்

"சுமைதாங்கி"

"வாங்க தாத்தா வாங்க உங்களுக்கு வயசு நூறு, இப்பதான் உங்களைப்பற்றி..."

'அடடேய் நிறுத்தடா, இன்னும் இரண்டு வருடங்களில் என்னை அனுப்பப் பார்க்கிறியா?'

'தாத்தா உங்களுக்கு தொண்ணூற்றெட்டு வயசாச்சா அப்ப ஆறுமுகநாவலரை நேரிலேயே கண்டிருப்பீங்க...'

'ஆமாடா ஆமா நாவலர் இப்ப உயிரோடிருந்தா இன்று தமிழரின் நிலையைப் பார்த்து இரத்தக் கண்ணீர் வடிப்பார்.'

'அவர் சமய வாதியாச்சே அரசியலில் ஈடுபடுவாரா?'

'தன்னின மக்கள் இன்னொரு இனத்திற்கு அடிமையாவதை எந்தச் சமயவாதியினாலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியுமா அதிலும் நாவலர் ஒரு அவதார புருடராச்சே. பேருக்கும் புகழுக்குமாக அவர் எதையும் செய்யவில்லை. அரசியலிலும் அன்று ஈடுபாடு கொண்டிருந்தார்.'

'சமய வாதிகள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்கிறார்களே?'

'தமிழன் தன்னைத்தானே ஆண்டு கொண்டு சுதந்திரமாக வாழ்ந்தால் சமய வாதிகள் அரசியலில் கலந்து கொள்ளாதிருக்கலாம்' ஆனால் தன்னினம் இன்னொரு இனத்திற்கும், மொழிக்கும், மதத்திறகும் அடிமையாவதைச் சமயவாதியால் சகித்துக்கொள்ள முடியுமா அதனால் தான் அன்று நாவலர் பெருமான் கொதித்தெழுந்து சமயப் பிரசாரம் செய்தது மாத்திரமல்லாது தனித் தமிழ்ப் பாடசாலைகளையும் ஆரம்பித்தார். சைவத்தையும் தமிழையும் ஆட்சியாளரிடமிருந்து காப்பாற்றும் ஒரே நோக்கமாகவே அவர் செயல்பட்டார்...'

'போதும் தாத்தா நன்றி, நன்றி மறவாத நாங்கள் நாவலருக்குச் சிலை வடிக்கிறம் இந்தாருங்கள் மாதிரிப் படம்.'

'என்னடா இது நாவலர் மாதிரியிருக்கே?'

.ஓம் தாத்தா நினைவுச் சின்னம் எப்படி அமைய வேண்டுமென்ற மாதிரிப் படம் இது நாவலர் என்று சரியாகச் சொல்லிப்பிட்டீங்களே உங்க கண்பார்வை... தூ—தூ—என் கண்ணூறு படாதிருக்கட்டும்...'

'அடடேய், இது ஒடியல் பிட்டும், குரக்கன் பிட்டும் தின்று உழைத்த வைரம் பாய்ந்த உடல், இந்த நாளையில பாழாய்ப்போன நாகரீகம் வந்து பெடியள் உத்தியோகம்என்று வெளிக்கிட்டு இமிட்டேசன் வாழ்க்கையல்லே வாழுதுகள். அது கிடக்க யாரடா இந்தப் படம் வரைந்தது?'

'ஏன் தாத்தா நல்லாயிருக்கா?'

'நன்றாகத்தான் இருக்கு ஆனால் ஒரு குறை...'

'என்ன குறை தாத்தா?'

'நாவலர் பெருமான் எதைப் போதித்தாரோ அதற்குத் தானே உதாரண புருடராகவும் விளங்கினார் என்பது சிலருக்குத் தெரியாதிருக்கலாம், திரிபுண்டரம் என்றால் என்ன என்பதைச் சரிவரத் தெரிந்து கொண்டால் இதிலுள்ள குற்றம் உனக்குப் புரியும். விபூதியியலில் நாவலர் சில வினாக்களுக்கு விடை தருகிறார்.

அதன்படி குறிகளமைந்தால் இன்னும் நன்றாக அமைந்திருக்கும்.'

'புரியவில்லைத் தாத்தா.'

'திரிபுண்டரந் தரிக்குமிடத்து நெற்றியில்இரண்டு கடைப்புருவ வெல்லைவரையுந் தாத்தல் வேண்டும். அதில் கூடினாலும் குறைந்தாலும் குற்றமாம். மார்பிலும் புயஙகளிலும் அவ்வாறங்குல நீளந் தாித்தல் வேண்டும், மற்றைத்தானங்களில் ஒவ்வோரங்குல நீளந் தரித்தல் வேண்டும். குறிகளில் இடைவெளி ஒவ்வோரங்குல அளவினதாய் இருத்தல் வேண்டும்.'

'தாங்ஸ் தாத்தா உங்களுக்கு ஞாபக சக்தியும் அதிகம்.'

'சரி தம்பி போட்டுவா.'

# தப்பும் தவறுமாக வெளியிடப்பட்டுள்ள தமிழ் மலர்

தமிழ் மலர் 9ஆம்வகுப்பு எனும் நூலைக் கையில் எடுத்து முன 'அட்டை'யில் அச்சிடப்பட்டுள்ளவற்றைப் பிடித்துவிட்டு அடுத்த முதற் பக்கத்திலுள்ளவற்றைப் படிக்கும்பொழுது மயக்கம் உண்டாகின்றது; ஆராய்ச்சியும் பிறக்கினறது.

முன் அட்டையில் "தமிழ் மலர் 9" எனுந் தொடரிலுள்ள 9 எனும எண் எதைக் குறிககின்றது? புத்தகத்தையா? வகுப்பையா? முதற் பக்கத்தில் "9ஆம் வகுப்பு" என்று குறிப்புக காணப்படுவதால் முன் அட்டையிலுள்ள 9 எனும் எண் வகுப்பைக் குறிக்கின்றதென்று கொள்ளலாம். அவ்வாறுயின் முன் அட்டையிலுள்ள "க. பொ. த.தேர்வு(சாதாரண) 1ஆம் வருடம்" என்பது எதைக் குறிக்கின்றது? இந்த மயக்கத்தை ஏன் உண்டாக்கவேண்டும்?

இத்திணைக்களம் வெளியிட்டுள்ள ஆங்கில பாடநூல்களிற் குறிககப்பட்டிருப்பதைப் போல "தமிழ் மலர் 9ஆம புத்தகம். க.பொ.த. தேர்வு (சாதாரண) 1ஆம் வருடத்துக்குரியது" என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கலாம். (தமிழ் மலர் ஏழாம் புதத்கத்தின iiiஆம் பககம் பாாக்குக.)

### பொருளடக்கம்

அடுத்ததாகப் "பொருளடக்கம்" என்ற பகுதியை நோக்குவோம். 'இலக்கண அடிபபடை அறிவு". என 134ஆம் பக்கததில உளள தொடர் பொருளடக்கத்தில "அடிப்படை இலக்கண அறிவு" என உருமாறறம் பெற்றுளளது.

பக்கம் 282இல் உள்ள 'வாக்கியங்களை வனப்புற எழுதுவதற்கு உதவும சொற்றொடாகள்" எனுந் தொடர் பொருளடககத்தில் "வாக்கிய உபயோகத்துக்கான சொற்களும் தொடர்களும்' என உருத் திரிந்துளது.

(ஆ) 'வினைச் சொற்பகுதி' 191ஆம் பக்கத்திற்றொடங்குகின்றது எனப் பொருளடக்கம் கூறுகின்றது. ஆனால் 191ஆம் பக்கத்தில்இப்பகுதி இல்லை, இப்பக்கத்தில் 'உருபு மயக்கமும் பொருள் மயக்கமும்" மயக்குகின்றன. 'வினைச் சொற்பகுதி' எனுந் தலைப்பு நூல் முழுவதிலும் இல்லவே இல்லை. இதனைக் களவாடியவர் யாரோ?

இப் பக்கங்களில் வேறு பொருள்களே காட்சி தருகின்றன!

### முன் - பின் ஓட்டம்

(பக்கம்)

(அ) மூவகை வாக்கியங்களும் அவற்றின் இயல்புகளும —258

(ஆ) குறியீடுகள் என்னும் தரிப்புக்குறிகள் —262

(இ) சொற்பபிற்சி —265

### ஓர் ஆய்வுரை

மாற்றங்களும், முன்பின் ஓட்டங்களும், தலை தடுமாற்றங்களும், மயக்கங்களும் புலப்படுத்துவன யாவை?

பாடநூல்களை எழுதிப் பதிப்பித்தலிற் போதிய பயிற்சியற்றவர்கள் - பொறுப்புணர்ச்சியற்றவர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் க. பொ. த. தேர்வு (சாதாரண) 1ஆம் வருடத்துக்கு (9ஆம் வகுப்புக்கு) 1968இல் "தமிழ் மலர் 9" எனும் நூலின் முதற்பதிப்பை வெளியிட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர்(கள்) யார்? இந்நூல் எவ்வாறு எதற்காக ஆக்கப்பட்டது? இவ்வினாக்களுக்கு விடைதரும் முன்னுரையோ பிற குறிப்புக்களோ இந்நூலில் இல்லை.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் தமிழ்ப் பிரிவுக்குப் 'பொறுப்பானவரென' உதவி ஆணையாளர் திரு. அ. வி. மயில்வாகனம் கருதப்படுகின்றார். இந்நூலை ஆக்குவதற்குப் பொறுப்பாயிருந்தவர் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர் திரு. சோ. நடராசா என அறியப்படுகின்றது.

இவருக்கு, பண்டிதர் வ. நடராஜா, திருவாளர்கள் சு. வேலுப்பிள்ளை, த. கனகரத்தினம், ஆ. கந்தையா, சலீம், சி. எஸ். குலரத்தினம் என்போர் உதவி செய்தனர் எனவும் கூறப்படுகின்றது. இவர்களில் சிலர் இந்நூலிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி எதிர்த்தார்களாம். ஆனால் அதிகாரி அடக்கிவிட்டாராம்!

இந்நூல் வெளியிடப்பட்டவுடன், இந்நூலிலுள்ள பிழைகளையும் குறைகளையும் ஆசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் சுட்டிக காட்டத் தொடங்கினர். ஆசிரியர் சங்கங்களும் அகில இலங்கை இந்து மாமன்றமும் இந்நூலிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டி, கல்வி அமைச்சருக்கு முறையீடு செய்தன. பலவகைப் பிழைகளும் குறைபாடும் நிறைந்த இந்நூலை வெளியிட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினரும் இந்நூலை ஆக்கினோரும் அறிஞர் பலருடைய கண்டனத்துக்கு ஆளாயினர்.

கிளிநொச்சி பா. உ. திரு. கா. பொ. இரத்தினம் அவர்களிடமும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் முறையிட்டனர். பாராளுமன்றத்தில் வரவுசெலவுத் திட்டவிவாதத்தின்போது இந்நூலிலுள்ள குறைகளையும் எடுத்துக்காட்ட வேண்டுமெனவும் அவரைக் கேட்டுக்கொண்டனர்.

இந்நூலை ஆக்கி வெளியீடுதறகுப் பொறுப்பாயிருந்த உத்தியோகத்தர்கள் இதனை அறிந்தவுடன் இந்நூலைப் பற்றிப் பாராளுமன்றத்திற் பேசாமல் திரு. இரத்தினம் அவர்களைத் தடுத்தற்கு பெரியார் சிலரின் உதவியை நாடி ஓடினர்.

இவர்களின் முயற்சி தோல்வியுற்றது. நூலின் குற்றங்குறைகளைப் பற்றி கருத்துக்களைத் தமிழ் ஏடுகளும் வெளியிடத் தொடங்கின. இந்தக் குறைகள் வெளிவருவதைத் தடுத்துநிறுத்தவும், குறைகள் ஒன்றும் இல்லை என மழுப்பவும், குறைகூறுவோரை அச்சுறுத்தவும் இந்த உத்தியோகத்தர் அயராது முயல்வதன் "மர்மம்" யாதோ? குற்றமுள்ள நெஞ்சுகளின் குறுகுறுப்பு அருவருப்பைத் தான் தருகின்றது.

இச்சூழ்நிலையில் இந்நூலினை அலசிஆராயும் இந்த ஆய்வுரையினைச் சுதந்திரன் வெளியிடுதல் இன்றியமையாததாகின்றது. இந்த ஆய்வுரையில் மறுப்புக்குரியன இருப்பின் அவற்றை இந்நூல ஆக்கிய உத்தியோகத்தர்களோ பிறரோ ஆய்ந்துரைப்பின் அவ்வுரைகள் தகுதியுடையனவாயின் சுதந்திரனில் வெளியிடப்படும். —ஆசிரியர்

# நூலின் ஆரம்பமே மயக்கத்தை அளிக்கிறது!

'(இ) இடைச்சொற்பகுதி' பக்கம் 214 இலுளது எனப் பொருளடக்கம் எம்மை வழிப்படுத்துகின்றது. நூலில் 214 ஆம் பக்கத்தில் இப்பகுதி இல்லை. முன்னும் இல்லை, பின்னும் இல்லை. இருப்பதாகக் கணக் கண்டு பொருளடக்கத்திற் சேர்ந்த 'பிரகஸ்பதி' யாரோ?

### எங்கே தேடுவோம்!

இவ்வாறே பொருளடக்கத்திலுள்ள பின்வரும் பகுதியில் குறிப்பிடுவன யாவும் நூலில் எவ்விடத்திலும் இல்லை.

(பக்கம்)

(ஈ) உரிச்சொற்பகுதி—222

(உ) தொடர் மொழிப்பகுதி 224

(ஊ) பதவுறுப்புப்பகுதி 231

(எ) புணரியற் பகுதி —240

(ஏ) யாப்பியற் பகுதி—247

(ஐ) அணியியற் பகுதி—253

நூலிலுள்ள 222, 224 231, 240, 247, 253 எனும்,

(ஈ) வழுக்களும் திருத்தமும் —275

இந்நான்கு பொருள்களும் இப்பக்கங்களில் இல்லை. பின் பக்கங்களுக்கு ஓடிவிட்டன!

(பக்கம்)

(உ) எதிர்ச் சொற்கள் —282

(ஏ) பழமொழிகள் —295

(ஐ) தன்கூற்று பிறர்கூற்று —299

இவை மூன்றும்' வக்கிரத்துக்குள்'ளாகின.

'(ஒ) கடினஉரைநடையை இலகுவான உரை நடையில் எழுதல், - 303 என்பது பொருளடக்கத்தின் கடைசியிலுளது. இது, நூலிலே 304ஆம் பக்கத்தில் '10. கடினமான உரை நடைப் பகுதியை இலகுவான உரை நடையில் எழுதுதல்' எனச் செவ்வுருப் பெற்றுளது.

எந்தப் பாடநூலிலும் காணமுடியாத இந்த உருகள் இந்நூலை ஆக்குவதில் ஈடுபட்டார்கள் என்று மட்டும் கூறிவிடமுடியாது. "நாம் என்ன செய்தாலும் சிங்கள அதிகாரிகளுக்கு எப்படித் தெரியப் போகின்றது, அவர்களுக்கு நல்லவர்களாக நடக்கும் நம்மை யார் அசைக்கமுடியும்? எங்கள் 'தகிடுதத்தங்களை' சிங்கள அதிகாரிகள் அறிந்தால் இனப்பிரச்சினையை — பழம் பகைமைக்கதைகளை தனிச் சிங்கள எதிர்ப்பை' உதவிக்கு இழுத்து யாவற்றையும் மூடி மறைத்து விடலாம்' என்று எண்ணிப் பிழைக்கின்றவர்களின் ஆதிக்கம் கல்வி வெளியீட்டுத்திணைக்களத்திலும் இருக்கின்றமையால் இத்தகைய பிறழ்வுகள் காட்சியளிக்கின்றன.

(தொடரும்)

**க. இராமலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## யாழ். மாநகராட்சித் தேர்தல்

ஈழத் தமிழகத்தின் தலை நகர்களில் ஒன்றான யாழ்ப்பாண மாநகராட்சியின் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. தேர்தல் பிரசாரமும் சூடு பிடித்து வருகிறது. புதிய நகர பிதாக்களைத் தெரிவு செய்ய வேண்டிய மகத்தான பொறுப்பும் கடமையும் யாழ் வாக்காளப் பெரு மக்களின் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது. இந்தக் கடமையை வாக்காளப் பெருமக்கள் எப்படி ஆற்றப் போகிறார்கள் என்பதிலேயே யாழ்ப்பாண மாநகரின் எதிர்காலச் சீரும் சிறப்பும் பேரும் பெருமையும் தங்கியிருக்கப் போகிறது.

யாழ்ப்பாண மாநகரம் தமிழர்களின் தலை நகரம். ஒரு காலத்தில் தனியாட்சி நடத்திய சிறப்புப் பெற்ற திருநகரம். இந்நகரத்தின் ஆட்சிப் பொறுப்பை இதுவரை ஏற்று நடத்தியவர்களின் போட்டி மனப்பான்மையாலும், கோஷ்டித் தகராறுலும், சேடுகெட்ட நிர்வாகத்தாலும் யாழ்ப்பாண மாநகரத்தைக் கண்டு நாடு முழுவதுமே கைகொட்டி நகைக்கும் அளவுக்கு நிலைமை சீர்கெட்டுக் கிடந்ததையும் வரியிறுப்பாளர்கள் அடைந்த தொல்லைகளையும். முன்னேற்றமடைய வேண்டிய நகர் பின்னோக்கிச் சென்றதையும் வாக்காளப் பெருமக்கள் ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்துப் பார்க்க வேண்டியது இக்கட்டத்தில் மிகவும் அவசியமாகும்.

ஊழலும், மோசடியும், நாளொரு மேயரையும் பொழுதொரு உதவிமேயரையும் ஏற்றியிறக்கும் திருப்பணியும் தவிர இதற்கு முன் மாநகராட்சியைக் கைப்பற்றியிருந்தவர்கள் சாதித்ததென்ன? பஸ் நிலையத்தையும் நவீன சந்தைக்கான இடத்தையும் அங்கும் இங்கும் தாம் நினைத்தபடி அடிக்கடி மாற்றி ''சித்து'' விளையாட்டுக் காட்டியதன்றி வேறு ஆற்றிய பணியென்ன? இவற்றையெல்லாம் வாக்காளப் பெருமக்கள் அலசி ஆராய வேண்டும்.

யாழ். மாநகராட்சியை இதுவரை நடத்தியவர்களின் திறமைக் குறைவும், நிர்வாகச் சீர்கேடும்; தமிழ் மக்களின் ஆளும் திறமைக்குச் சவாலாகவும் மாற்றார்கள் கேலியும் கிண்டலும் செய்ய இடமளிப்பதாகவும் அமைந்திருந்தன.

இவற்றைப் பொறுக்க மாட்டாத வரியிறுப்பாளர்கள், மாநகராட்சி நிர்வாகத்தின் மீது ஊழல், மோசடி, திறமைக் குறைவு, வீண் பண விரயம், கையாலாகாத்தனம் போன்ற பல்வேறு குற்றச் சாட்டுகளைச் சுமத்தியதை தொடர்ந்தே விசாரணையொன்றை நடத்தியதன் பின்னர் மாநகராட்சியைக் கலைத்து அதன் நிர்வாகத்தை விசேட ஆணையாளர்களின் பொறுப்பில் ஒப்படைத்தார் அப்போது உள்ளூராட்சி அமைச்சராக விளங்கிய திரு. மு. திருச்செல்வம்.

விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர்—கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் யாழ். மாநகரம் வியத்தகு பல முன்னேற்றங்களைக் கண்டு வந்திருக்கிறது என்பதை எவரும் மறக்கமுடியாது. சீர்கேடடைந்திருந்த நகர நிர்வாகம் செப்பனிடப்பட்டிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல 30 இலட்சம் ரூபா செலவில் நவீன சந்தை அமைப்பதற்குக் கால்கோள் விழா நடத்தப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையிற்றான், சனநாயக மரபப்படி மீண்டும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிடம் மாநகராட்சி நிர்வாகத்தை ஒப்படைப்பதற்கான தேர்தல் நடத்தப்பட இருக்கிறது. எனவே விசேட ஆணையாளர்களின் ஆட்சியின் கீழ் நகரம் அடைந்த முன்னேற்றம் மீண்டும் தடைப்பட்டு விடாதபடி—சுயநலமின்றிப் போட்டி பொறாமையின்றி—கோஷ்டிப் பூசலின்றி மாநகராட்சியைத் திறம்பட நிர்வகிக்கக்கூடிய திறமை சாலிகளைத் தெரிவு செய்ய வேண்டியது வாக்காளர்கள் கடமையாகும்.

யாழ். மாநகராட்சித் தேர்தலின் மற்றொரு சிறப்பு, இத்தேர்தல் மார்ட்டின் கமிஷன் அடிப்படையில் நடைபெறுவதாகும்.

மார்ட்டின் கமிஷன் அறிக்கை யாழ். மாநகர மக்களுக்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும். முறையற்று—ஒழுங்கற்று—வகுக்கப்பட்டிருந்த வட்டார எல்லைகளை—நாடே போற்றும்படி சீராக, முறைப்படி வகுத்துக் கொடுத்திருக்கிறார் திரு. சி. எக்ஸ். மார்ட்டின். இதனால் எல்லா வட்டாரங்களிலும் ஏறத்தாழச் சம அளவு வாக்காளர்கள் இடம் பெறவும், பின் தங்கிய நிலையிலுள்ள சமூகங்களின் பிரதிநிதிகள் மாநகராட்சியில் இடம் பெறவும் வழி வகுக்கப்பட்டிருக்கிறது.

கரையூர், பாஷையூர் மக்களும் சிறுபான்மைத் தமிழர்களும் மாநகராட்சியில் முன்னைவிட அதிக இடங்களை வகிப்பதற்கு வழி வகுத்திருக்கிறது மார்ட்டின் கமிஷன்.

யாழ். மாநகர மக்களுக்கு நன்மை விளைவிக்கும் மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அமுல் நடத்தக் கூடாது என்று விடாப்பிடியாக ஒற்றைக் காலில் நின்றவர் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் என்பதை யாழ். வாக்காளர்கள் இதற்குள் மறந்திருக்க மாட்டார்கள்.

கட்சி மாச்சரியத்தால்—திரு. மார்ட்டின் ஒரு தமிழரசுக் கட்சிக்காரர் என்பதால்—மக்களுக்கு நன்மை அளிக்கும் மார்ட்டின் கமிஷன் அறிக்கைக்கு எதிராக நியாயமற்ற முறையில் பலமான எதிர்ப்புத் தெரிவித்த திரு. பொன்னம்பலம் கட்சியினருக்கு அதே மார்ட்டின் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் நடைபெறும் யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறோம்.

திரு. பொன்னம்பலத்துக்கு அரசியலில் மானம், ரோசம் இருந்தால், மார்ட்டின் கமிஷன் அடிப்படையில் நடைபெறும் யாழ். மாநகரசபைத் தேர்தலை அவரும் அவரது கட்சி ஆதரவாளர்களும் பகிஷ்கரித்திருக்க வேண்டும். பொ. கட்சியினருக்குத்தான் மானமும் இல்லை, ரோசமும் இல்லையே!

யாரை அனுப்பினாலும் அனுப்பாவிட்டாலும், யாழ்ப்பாண நகரின் நன்மை கருதிச் சிபார்சு செய்யப்பட்ட மார்ட்டின் கமிஷன் அறிக்கைக்கு முட்டுக்கட்டை போட முயன்ற பொ. கட்சியின் சார்பில் போட்டியிடும் பன்னிருவரில் ஒருவர் கூட மாநகராட்சிக்குத் தெரிவு செய்யப்படக் கூடாது. இப்படிச் செய்வதன் மூலம் தான் மார்ட்டின் கமிஷன் அறிக்கையை அநீதியான முறையில் எதிர்த்த திரு. பொன்னம்பலத்துக்கு சரியான பாடம் கற்பிக்க முடியும். இதை யாழ். வாக்காளர்கள் கவனத்தில் வைத்திருப்பார்கள் என்று நம்புகிறோம்.

இத்தேர்தலில் தமிழரசுக்கட்சி, கட்சிசார்பில் ஏழு வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறது. இவ்விடத்தில் தமிழரசுக் கட்சியை மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தமிழரசுக் கட்சி 23 வட்டாரங்களிலும் கட்சி ரீதியாக தனது வேட்பாளர்களை நிறுத்தத் தவறியது மிகப் பெரிய தவறாகும். இதனால் ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை மாநகரசபைக்குத் தெரிவு செய்வதில் வாக்காளர்களுக்கு சங்கடமேற்பட்டுள்ளது.

பல வட்டாரங்களில் தமிழரசு ஆதரவாளர்கள் சுயேச்சைகளாகப் போட்டியிடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. கட்சி ஆதரவு பெற்ற இச் சுயேச்சை வேட்பாளர்கள் யார் யார் என்பதையாவது தமிழரசுக்கட்சித் தலைவர்கள் வாக்காளர்களுக்கு அடையாளங் காட்ட முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒரே மனப்பான்மையுடன், ஒரே நோக்கில் பணியாற்றக்கூடிய வேட்பாளர்களை வாக்காளர்கள் தெரிவு செய்ய முடியும்.

விசேட ஆணையாளர்களின் ஆட்சியின்கீழ் யாழ்ப்பாண மாநகரம் அடைந்த முன்னேற்றம் சீர்கெடாது சிறக்கவும், பஸ்நிலையம் அடிக்கடி அங்கும் இங்கும் இடம் பெயராது இருக்கவும், நவீன சந்தை தாமதமின்றி நிறுவப்படவும், ஊழலும், நிர்வாக சீர்கேடும் மறையவும், தமிழன் ஆட்சி முறை தெரிந்தவன் என்பதை நாடு முழுவதும் உணரவும், தமிழரசு வேட்பாளர்களையும் தமிழரசு ஆதரவு பெற்ற வேட்பாளர்களையும் மாநகராட்சித் தேர்தலில் தெரிவு செய்து அனுப்ப வேண்டியது யாழ்ப்பாண வாக்காளர்களின் நீங்காக் கடமையாகும்.

இந்தப் பொறுப்பிலிருந்து அவர்கள் தவறினால்—முதற் கோணல் முற்றும் கோணலாகி விடுமென்பதை [illegible] கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

# அரசகரும மொழித் திணைக்களத்தில் சதி!

தூங்குபவனை எழுப்பலாம். தூங்குவது போலப்பாசாங்கு செய்பவனை எழுப்பமுடியாது என்று கூறுவார்கள்.

தனிச் சிங்களத்தில் காசோலைகளை தமிழ் பேசும் மக்களுக்கு வழங்குவது அநீதியானது; பாரபட்சமானது; தமிழ் மொழிச் சட்டத்துக்கு முரணானது என்றெல்லாம் தமிழ் பேசும் மக்களும் அவர் தம் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்திலும் வெளியிலும் பலமான கண்டனக் குரல் எழுப்பி வந்தும் அதைப்பற்றிக் காதில் வாங்கிப் கொள்ளாதது போல தொடர்ந்தும் தனிச்சிங்களக் காசோலைகளையே தமிழ்ப் பேசும் மக்களுக்கு வழங்கி வருகிறது அரசாங்கம்.

கடந்த வாரம் கூட தனிச் சிங்களத்திலே காசோலைகள் எழுதப்பட வேண்டும் என்று வடபகுதி கல்விக் கந்தோருக்கு அரச கரும மொழிக் கமிஷனர் சுற்றறிக்கை யொன்று அனுப்பியுள்ளாராம்.

### மொழிச் சட்டம் தூங்குகிறதா?

தமிழ் பேசும் மக்களுடன் அரசாங்கம் சகல தொடர்புகளையும் தமிழிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை இதே அரசாங்கமே 1966ம் ஆண்டு கொண்டு வந்து நிறைவேற்றிய தமிழ்மொழி விசேட பிரமாணங்கள் சட்டம் தெட்டத் தெளிவாக கூறுகிறது. சட்டத்தை நிறைவேற்றி தூங்க வைத்துவிட்டு, தமிழ் பேசும் மக்கள் மீது தனிச் சிங்களத்தையே இந்த அரசாங்கமும் தொடர்ந்து திணித்து வருவது தமிழ் பேசும் மக்களின் ஆத்திரத்தையும் அதிருப்தியையும் அதிகரித்துள்ளது.

அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளர் இந்நாட்டில் இரண்டு மொழிச் சட்டங்கள் இருப்பதை அடியோடு மறந்து சிங்களம் மட்டும் சட்டத்தை தமிழ் மக்கள் மீது திணிப்பதிலே அதிக அக்கறை காட்டி வருகிறார் என்பதை அவரது செயல்கள் துலாம்பரமாகக் காட்டி வருகின்றன.

### பழைய வழியில்...

இப்போதிருக்கும் அரசகருமமொழித் திணைக்கள ஆணையாளர் திரு. பீட்டர் அபயசேகராவுக்கு முன்பு அப்பதவியிலிருந்தவர் தமிழர்களுக்கு முழு விரோதமாக நடந்து வருவதாக நீண்ட நாட்களுக்குமேலாக குற்றம் சாட்டப்பட்டு வந்தார். இறுதியில் தமிழ்ப் பிரதிநிதிகளின் எதிர்ப்பின் காரணமாக அப்பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டு புதிய ஆணையாளராக திரு. பீட்டர் அபயசேகரா நியமிக்கப்பட்டார்.

திரு. பீட்டர் அபயசேகரா, பாரபட்சமின்றி தமிழ் மொழிச் சட்டத்தை அமுல் நடத்துவாரென்றும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளிலிறங்க மாட்டாரெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் திரு. பீட்டர் அபயசேகராவின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் முன்னைய ஆணையாளரை அடியொற்றி — தமிழர்களுக்கு எதிரானதாகவே காணப்படுகின்றன.

### பயன் பூஜ்யம்

தமிழ் மொழிச் சட்ட பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டு ஆண்டுகள் மூன்று ஆகின்றன. இதுவரை அச் சட்டவிதிகளை அமுல்நடத்த ஒருவித நடவடிக்கையும் அரசகரும மொழித்திணைக்களத்தால் எடுக்கப்படவில்லை.

தமிழ் மொழிச்சட்ட அமுலுக்கு பொறுப்பாக அவ்வேலைகளைக் கவனிக்க உதவி ஆணையாளராகத் தமிழர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்று தமிழரசார் பல முறை காவடி தூக்கியும் கழுதையாய்க் கத்தியும் பயன் எதுவும் ஏற்படவில்லை.

தமிழ் மொழிப் பிரமாணங்களை அமுல் நடத்துவதற்கு பதிலாக தனிச் சிங்களத்தை தமிழ் மக்களிடம் திணிப்பதிலே தான் அரசகரும மொழித் திணைக்களம் அபரிமிதமான ஆர்வம் காட்டி வருகிறது. நூற்றுக்கு தொண்ணூற்றைந்து வீதம் பேர் தமிழர்கள் வாழும் வடபகுதியிலேயே தனிச்சிங்களக் காசோலை வழங்கும்படி உத்தரவிட்டிருக்கிறது.

### அந்தரங்கம் என்ன?

அரசகருமமொழித்திணைக்களத்தில் நடைபெறும் இச்சதியின் அந்தரங்க நோக்கம் என்ன? தமிழ் மக்களிடம் தனிச் சிங்களத்தை திணிப்பதன்மூலம் இப்போதைய அரசாங்கத்துக்கும் தமிழ் மக்களுக்குமிடையே பகைமையையும் வெறுப்பையும் மூட்டி விடுவதா? இதன் மூலம் சுதந்திரக் கட்சியை மீண்டும் பதவிக்கு கொண்டு வருவதா?

அரசகரும மொழித் திணைக்களத்தில் நடைபெறும் இச்சதிச் செயல்களைக் கண்டும் காணாமல், உணர்ந்தும் உணராமல், அரசாங்கம் வாளா இருக்குமானால், அதனால் கஷ்டம் தமிழ் மக்களுக்கென்றாலும், நஷ்டம் அரசாங்கத்துக்குத்தான். ஏனெனில் எதிர்காலத்தில் இந்த அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள் அற்பசொற்ப ஆதரவு கொடுப்பதைகூட நிறுத்திவிடுவார்கள்.

எனவே அரசகரும மொழித் திணைக்களத்தில் நடைபெறும் இச்சதியின் உள் நோக்கத்தை உணர்ந்து, தமிழ் மக்கள் மீது தனிச்சிங்களக் காசோலைகள் திணிக்கப்படுவதை தடுத்துநிறுத்த ஆவனசெய்யும்படி பிரதமரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் அடிமை நிலையைத் தகர்த்தெறியும் அரசியலமைப்புக்காக போராட ஒன்று படுவோம், வாரீர்!!

## தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுக்கட்சி அழைப்பு

“இன்றைய நெருக்கடியான அரசியற் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படவேண்டுமென்ற கோரிக்கையை இலங்கைத் தமிழரசுக்கட்சி மனப்பூர்வமாக வரவேற்கின்றது.

“கடந்த 20 ஆண்டுகளாக தமிழினம் அடைந்து வரும் இன்னல்கள் அத்தனைக்கும் காரணம் இந்த நாட்டின் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் நிரந்தர ஆளும் இனமாகவும் சிறுபான்மையினர் ஆளப்படும் இனமாகவும் ஆக்கிவைத்திருக்கும் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பே என்ற கட்சியின் கருத்து சமீபத்தில் நடந்த சம்பவங்களினால் ஊர்ஜிதப் படுத்தப்பட்டிருக்கின்றது.

எனவே தமிழினத்தின் உரிமையைப் பெறும் எந்த முயற்சியும் இந்த அடிப்படைக்காரணத்தை நிவர்த்தி செய்யும் முயற்சியாகவே இருக்கவேண்டுமென்று கட்சிகருதுகிறது.

எம்மை ஆளப்படும் இனமாக ஆக்கிய அரசியல் அமைப்பை மாற்றி அமைக்காத எந்தப் பரிகாரமும் எமக்கு விமோசனம் அளிக்க முடியாது

இந்த அபிப்பிராயத்தை மாற்றியமைப்பதற்கு இரண்டு வழிகள் தமிழ் மக்களுக்குக் காட்டப்படுகின்றன.

ஒன்று தமிழ் மக்களின் சுயாதீன உரிமையை நிலை நாட்டும் அதே நேரத்தில் நாட்டின் ஒற்றுமையை ஏற்படுத்தும் சமஷ்டி அமைப்பு.

இரண்டாவது நாட்டைப்பிரித்து தமிழ் ஈழத்தைத் தனியாக நடத்தும் கோரிக்கை.

ஒரு புறத்தில் ஒற்றை ஆட்சி அமைப்பு நிலைக்கக் கோருவோருக்கும் மறுபுறத்தில் பிரிவினை கோருவோருக்கு மிடையே ஒற்றுமை ஏற்படுத்த வழி சமஷ்டி அமைப்பே என்பது தெளிவு.

எனினும் எந்த உருவத்திலும் தமிழினத்தின் சுயாதீன உரிமையை நிலைநாட்டி ஆளப்படும் நிலையை மாற்றியமைக்கும் அடிப்படையில் ஒன்று படுமாறு தமிழ் பேசும் மக்களைத் தமிழரசுக் கட்சி அழைக்கிறது”

*—இவ்வாறு இம்மாதம் 3ம் 4ம் திகதிகளில் மட்டுநகரிலுள்ள திரு. செ. இராசதுரை எம்.பி. இல்லத்தில் நடைபெற்ற தமிழரசு செயற்குழு, தமிழ் பேசும் மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.*

### புதிய ஊழியர் பிரச்சினை:

## பிரதமர்— தமிழரசு பேச்சுவார்த்தை

*சிங்களத் தேர்ச்சிபெறுத காரணத்திற்காக திறைச்சேரியால்வேலைநீக்கஅறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கும் 1016 புதிய ஊழியர்கள் பிரச்சினை பற்றியும், சிங்களத் தேர்ச்சி இல்லாத தனால் சேவை நீடிப்பு நசுக்கப்பட்டிருக்கும் தமிழ்த் தலைமை ஆசிரியர்கள், அதிபர்கள் நிலைபற்றியும், முறையே பிரதமர், நிதியமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோருடன்பேச்சுவார்த்தை நடத்தி திட்டவட்டமான நடவடிக்கையெடுக்கப்பட வேண்டுமென தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களை மட்டுநகரில் கூடிய தமிழரசுச் செயற்குழு பணித்துள்ளது.*

—

### ஜனவரியில் மாநாடு

தமிழரசுக் கட்சியின் 11 வது தேசிய மாநாட்டை யாழ்ப்பாணத்தில் 1969 ஜனவரியில்நடத்துவதென்ற தீர்மானத்தையும்தமிழரசுச் செயற்குழு ஊர்ஜிதம் செய்தது.

10வது மாநாடு கல்முனையில் நடைபெற்றது தமிழ் பேசும் மக்கள் அறிந்ததே.

## தகவல் தெரியுமா?

புங்குடுதீவு வாசியான திரு. இராசையா என்பவர் சென்றமாதம் 28ம் திகதி இரவு யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த மெயில் வண்டியில் தாக்கப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள், அல்லது இது பற்றித் தெரிந்தவர்கள் அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் அளிக்குமாறு வட மாகாணப் பொலிஸ் சுப்பிரீன்டன் கேட்டுள்ளார். இத் தகவல் கிடைத்தால் தாக்கியவர்களைக் கண்டு பிடிக்க உதவியாய் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புறக் கோட்டை கபோஸ் லேனில் வர்த்தகம் செய்த திரு. இராசையா அக்டோபர் 28ம் திகதி இரவு யாழ்ப்பாணமெயில் புகை வண்டியில் சுமார் இரவு 9. 30மணியளவில் தாக்கப்பட்டதாக சொல்லப்படுகின்றது.

இவர் 29-ம் திகதி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானர்.


கீழ் கண்ட இடங்களுக்கு சுதந்திரன் விற்பனையாளர்கள் தேவை

ஆனைக்கோட்டை
கொட்டகலை
ஏருவூர்

நிக்கவரெட்டிய
பசறை
எஹலியாகொடை

விபரங்கட்கு
சுதந்திரன் விநியோக அதிபர்
த. பெ.இல 1183 கொழும்பு-12


## அரசியற் பண்பாடு இது தானு?

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் உபதலைவரான திரு. ஆர். வி. சுவாமிநாதன் என்பவர் இ. தொ. கா. தலைவர் திரு. தொண்டமானின் விருந்தினராக கடந்த வாரம் இலங்கைக்கு வந்து சென்றுள்ளார்.

தாராளமாக வந்து செல்லட்டும். நமக்கு அதுபற்றி எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனல் வந்தவர் பேசாமல் வாயை வைத்துக் கொண்டு போயிருக்கக் கூடாதா?

வந்த இடத்தில் ஓர் ஆங்கில தினசரியின் நிருபருக்கு அளித்துள்ள பேட்டியில் தமிழ்நாட்டு அரசியல் பிரச்சினைகளை கிளறியிருக்கிருர். தமது கட்சியைப் பற்றி கூறியிருந்தாற்கூடபரவாயில்லை. தமிழகத்தை ஆட்சிபுரியும் தி. மு. கழகத்தை மிகக் கீழ்த்தரமாக — கேவலமாக கண்டித்திருக்கிருர்.

### சினிமாக் கட்சியாம்

தி. மு. க.வைக் கண்டிப்பதற்கு திரு. சுவாமிநாதனுக்குள்ள உரிமையை நாம் மறுக்கவில்லை. ஆனல் அதைத் தமிழகத்தில் வைத்துக்கொண்டிருக்கலாமே! ஈழத்தில் வந்து, உள்வீட்டுச் சண்டையை ஊருக்கு சொல்வது பண்புடைய செயலா என்பதே நமது கேள்வியாகும்.

கடந்த பொதுத் தேர்தலில் 150 சட்டசபை ஸ்தானங்களையும், 20-க்கு மேற்பட்ட பாராளுமன்ற ஸ்தானங்களையும் கைப்பற்றி பெருவெற்றியீட்டித் தமிழகத்தின் ஆளும் கட்சியாக விளங்கும் தி. மு. கழகத்தை வகுப்புவாதக் கட்சியென்றும், சினிமாக் கட்சியென்றும் பண்பற்ற முறையில் திரு. சுவாமிநாதன் தாக்கியுள்ளார்.

இப்படிக் கூறியதன்மூலம் திரு. சுவாமிநாதன் இழித்துரைத்திருப்பது தி. மு. க.வையல்ல— தி.மு.க.வுக்கு வாக்களித்த இலட்சக்கணக்கான வாக்காளர்களையும், தி. மு. கழகத்தை தம் உயிர் நாடியாகக் கொண்டுள்ள கோடிக்கணக்கான தமிழர்களையும்தான்.

### வீரப்பு

இலங்கை மீது ஆக்கிரமிப்பு நடத்தும் எண்ணம் தமக்கு கிடையாதென்பதை தி. மு. க. முதல்வரான அறிஞர் அண்ணு பல முறை எடுத்துக் கூறியிருக்கிருர். அப்படியிருந்தும், திரு. சுவாமிநாதன் பெரிய வெற்றிவீரர்போல, “இலங்கையில் தி. மு. க. தலையிடுவதை இந்தியாவில் கடைசி காங்கிரஸ்காரன் இருக்கும் வரை அனுமதிக்கமாட்டான்” என்று வீராப்பு பேசியிருக்கிருர்.

இலங்கையில் தி. மு. க. தலையிட்டால் அ[illegible]த்து நிறுத்த கடைசி காங்கிரஸ்காரன் இருக்கும்வரை முயலுவான் என்று கூறும் திரு. சுவாமிநாதனை, சீனக்காரனும், பாகிஸ்தான்காரனும் இந்தியாவுக்கு எதிராகப்படையெடுத்தபோது, என்ன செய்துகொண்டிருந்தீர்கள், எத்தனை காங்கிரஸ்காரர்கள் அப்படையெடுப்பாளர்களுக்கு எதிராகப் போராடி உயிரைவிட்டீர்கள் என்று தி.மு.க. ஆதரவாளர் ஒருவர் கேட்டால், என்ன பதில் கூற முடியும்?

இலங்கையில் தமிழர்கள் தெரு நாய்கள் போல தாக்கப்பட்டபோது சாதாரண அனுதாபம்கூட தெரிவிக்க தமிழ்நாடு காங்கிரஸ் முன்வரவில்லை. தி.மு.க.தான் மாபெரும் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தி அனுதாபம் தெரிவித்தது. இதற்குக் காரணம் இன உணர்ச்சி தவிர வேறெதுவுமல்ல.

அது எப்படியோ போகட்டும்—ஆனல் வெளிநாட்டுக்குவந்த இடத்தில் உள்ளூர் பிரச்சினைகளைக் கிளப்பியதும், முக்கியமான ஒரு அரசியற்கட்சியை இழித்துரைத்ததும் அரசியல் பண்பாடாகாது. திரு. சுவாமிநாதன் இதை உணர்வாரா?

### சத்தம் போடாதே.

சாலைகளில் கார், ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், பஸ் முதலியவற்றை விரைவாகஓட்டிச் செல்பவர்கள் சுற்றுப் புறங்களைப் பற்றிச் சற்றும் கவலையின்றி பேரிரைச் சலுயுடன் தங்கள் ஊர்திகளை செலுத்திக் கொண்டுபோவதைப் பார்க்கிருேம். சாலைகளில் இப்படி பேரிரைச்சலைக் கிளப்புவது ஜெர்மன் கூட்டாட்சிகுடியரசில் [illegible] பானகுற்றமாகக் கருதப்படுகிறது.


அச்சகத்தோரே! அச்சம் வேண்டாம்!!

இறக்குமதிக் கட்டுப்பாட்டினல் புதிய அச்சுக்களை வாங்க முடியவில்லையே என்று ஏங்க வேண்டாம்

இறக்குமதி அச்சுக்களை விட ஏற்ற மிகு அச்சுக்களை இலங்கையிலே வார்த்துக் கொடுக்கின்ருேம்.

புதிய தமிழ் ஆங்கில அச்சுக்கள்

விபரங்களுக்கு

சுதந்திரன் அச்சுவார்ப்பகம்

194 ஏ, பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

தொலைபேசி: 23411 த. பெ. 1183


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அருணோதயம்

**எமது சிறுகதை**

**வீ. சீத்தாராமன்**

''இயேசுவே!''......என்ற முணுமுணுப்புடன் ஏக்கப் பெருமூச் சொன்றும் விரைந்தது! புனித பைபிளை கையிலெடுத்து ஏடுகளைப் புரட்டினேன்!... 'குழந்தைகள் என்னிடம் வருவதற்கு வழி விடுங்கள், அவர்களே இறைவன் குடியிருக்கும் ஆலயங்கள்' என்ற கருத்துத் துளிகள் என்னுள்ளத்தை அச்சுறுத்தி வருத்த எத்தனித்தன! அருளுலக அரசன்—ஞான மொழி பேசிய இயேசு கிறீஸ்துவின் திவ்விய மொழிகள். என் மனத்திரையில் படிந்து கிடந்த எண்ணக் கோர்வைகளைக் கிளறின!.........

திவ்விய இரட்சகன்—தேவப்பிதா, வியந்து மொழிந்த தெய்வக்குழந்தைகளின் பேறு, என் வாழ்வுக்குக் கிட்டாததை எண்ணி எண்ணிப் புண்ணுகிப் புழுங்கியது என்னுள்ளம். குழந்தைப் பேற்றுக்காகப் பேதலித்துத் தவித்து கண்ணீர் சிந்தி கரைந்துருகும் என் துணைவி ஞானத்தின் மோன நிலையை நினைவு கூர்ந்துமறுகி மாய்ந்தது என் மனம் ஞானத்துக்கும் எனக்கும் மணம் முடிந்து ஐந்தாறு ஆண்டுகளுக்கு மேலாகியும், எங்கள் வாழ்வில் நிரந்தரமாயிருந்து வரும் பிள்ளையில்லாப் பெருங் குறையானது எங்களிருவரின் நெஞ்சங்களிலும், இடையறாத சஞ்சலத்தை மிகுவிப்பதை உணர்ந்து உள்ளுக்குள் அலைக் கழிந்தேன்!

'மாமா ...; மாமா!... மாதா கோயில் பூசைக்குப் போனீங்களா நீங்க?' என்ற குரல் கேட்டதும் என் எண்ண முகில்கள் மெல்ல மெல்ல விலகின. திரும்பிப் பார்த்த பொழுது, பக்கத்து வீட்டுச் சிறுமி—புனிதம், என்னருகில் நெருங்கிக் கொண்டிருந்ததைக் கண்டு என் விழிகள் மலர்ந்தன! அன்புததும்பும்-ஆவல்மீதூர சிறுமியை நெஞ்சோடு அரவணைத்துக் கொஞ்சித் தழுவினேன். பச்சிளம் பாலகனின் உச்சி மோந்து உள்ளம் குளிர்ந்தேன். புனிதத்தின் நீலவண்ண விழிகளும், பொன்னெனமின்னிய சின்னஞ் சிறு கன்னங்களும், சிறுநகை பூத்த செவ்விதழ்களும் என் கருத்தை ஈர்த்தன! சிறுமியவளின் நறுமேனியினது புது மெருகும், பிறைமதி நுதலும், எழில் பொழிந்த வதனமும் என்னுள்ளத்தில் புத்தொளியை நிலைபெறச் செய்தன! புனிதத்தின் தெய்வ அழகில் மூழ்கித் திளைத்தவனாய்—என்னையும் மறந்து இறும்பூதெய்தினேன்!

'வைச்ச கண்ணு வாங்காம ஏன் என்னை அப்படிப் பார்க்கிறீங்க மாமா...? என் மேல அவ்வளவு ஆசையா உங்களுக்கு?' என்று கிள்ளை மொழிகளில் வினவிய குழந்தையின் மழலை மொழிகள் என்னுள்ளத்தைக்கொள்ளை கொண்டன!... ,பூசைக்கு நேரமாச்சே..இன்னும் புறப்படலையா நீங்க?' என்று வினவிக் கொண்டே வந்த ஞானம், என்னோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்த குழந்தை—புனிதத்தைக் கண்டு சற்றே தயங்கினாள்!..

ஞானத்தின் முகச் சாயலில் சோகத்தின் நிழல் விரிந்தது...! அவளது விழிகளின் விளிம்பில் கண்ணீர்த் துளிகள் முத்து முத்தாய் வரிசை கோர்த்தன. மௌனமே உருவாய்—தலை கவிழ்ந்த வாறுநின்றிருந்தஞானத்தை அன்பும் அருளும் வழியும் விழிகளால் பதார்த் வண்ணம் புனிதம்; 'மாமி... மாமி!...என்னோடு கோபமா, ஏன் பேச மாட்டேங்கிறீங்க?' என்று வினவிக் கொண்டே ஞானத்தின் முன்தானையைப் பற்றிஇழுத்தாள்!... 'இல்லை இல்லை புனிதா!...உன்னைப் பார்த்ததும் என்னவோ யோசனையாய்ப் போச்சு...!' என்று சொல்லிக் கொண்டே ஞானம், புனிதத்தை அன்புடன்கட்டி அணைத்தாள்!

ஞானத்தின் கலக்கமும் தயக்கமும் என்னுள்ளத்தை உருக்கின! அதுவும்—அந்த ஐந்தாறு ஆண்டுகளில்—தொடர்ந்து ஏற்பட்ட கருச்சிதைவுகளால் உருக்குலைந்து போயிருந்த ஞானத்தின் நிலையை நினைந்து நினைந்து வருந்தினேன்! பெண்மையின் முழுமையை மென்மேலும் வண்மையுறச் செய்யும் தாய்மைப்பேற்றை இழந்து நாளுக்கு நாள் நலிவுறும் ஞானத்தின் அவல நிலை என்னைக் கதிகலங்க வைத்தது! மலர்ந்தும் மலராத தன் தாய்மைப் பேற்றை உன்னி உன்னி—தன்னிலையிழந்தாள் ஞானம்.

காலத் தேர் விரைந்து ஊர்ந்தது! எல்லாம் வல்ல சர்வேசுவரன் அருளால் மறுபடியும் கருவுற்றாள்! உடலுந் தோலுமாய் ஒட்டிப் போயிருந்த ஞானத்தின் மேனியில் மீண்டும் மினுமினுப் பேறியது! மையலவளின் சாயலில் புத்தொளியின் பள பளப்பும், புது மெருகின் மிளிர்வும் ஒளிர்த்தன! மங்கையவளின் தங்கமென இலங்கிய முகத்தோற்றத்தில் தாய்மைக் கீற்றுக்களின் பரிபூரணம் அரும்பு விட ஆரம்பித்தது! தையலவளின் வெய்யேனொளி வீசிய நயனங்களில் நம்பிக்கையொளி சுடர்விட்டுப் படர்ந்தது! புதுமைச் சுவையின் மேலீட்டால்— பதுமையவளின் அயர்ந்து தளர்ந்த நடை; கருமையும் காய்வும் உருவாகி வெடித்துத் தோன்றிய உதடுகள்; குதிக்கால் முதல் கணுக் கால் வரை பருத்துத் திகழ்ந்த பாதங்கள்— தாய்மையின் நிறைவைப் பறை சாற்றும் பிரதி பிம்பங்களான இவையனைத்தும் என் மனத் துயருக்கு மாற்று மருந்தாய்த் துலங்கின. ஒன்பது திங்கள் நிறைவுற்று, தாய்மைக் குரிய பூரிப்பு நிரந்தரமாய் நின்றொளிர்ந்தஞானம் மருத்துவ மனையில்—மகப் பேற்றுக்காகத் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்த தருணம் அது!...

என் துணைவி—ஞானம், பிரசவ அறையினுள்ளே பிரசவத்துக்காகப் பரிதவித்துக் கொண்டிருக்க, நானோ இருக்கவும் முடியாமல் எண்ணவும் முடியாமல் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தேன்; நேரம் செல்லச் செல்ல என்னுள்ளத்தில் அறுதியிட்டுச் சொல்ல முடியாத உருக்கமும் கலக்கமும் பெருக் கெடுத்தன! மகப் பேற்றுக்காக மருத்துவ மனைக்குப் பயணம் வைத்துக் கொண்டிருந்த தருணத்தில் ஞானம்; 'அத்தான் பிரசவத்தை நெனைச்சதும் இந்தப் பெண் பிறவியே வேண்டானு போவுது! என்னைப் போல பெண்ணாய்ப் பிறந்து' தாய்மையை அனுபவிக்கப் போகும் ஒவ்வொரு பெண்ணுக்கும் பிரசவந்தான் பெரியதொரு சோதனை!... இந்தப் பிரசவச் சோதனை சொகமாக முடிஞ்சுட்டா சொர்க்கந்தான்!... இல்லேனா மீளமுடியாத நரக வேதனையை அனுபவிச்சு மடிய வேண்டியதுதான்!... அத்தான், இந்தப் பிரசவத்தில் நான் உயிர்ப் பிழைச்சுட்டேனா... அது என்னோட மறு பிறப்புதான்!' என்று சொல்லி, கண்கள் மல்கி, கதறியழுத இந்த வார்த்தைகளை நினைவு கூர்ந்து பார்த்தபொழுது என்னுள்ளூற புல்லரித்துச் சிலிர்த்தது!

எனக்குள் ஏதேதோ எண்ணி எண்ணிக்கலங்கியும் புழுங்கியுமே இரண்டு மணித்தியாலத்தைக் கழித்தாயிற்று! ஞானத்தின் பிரசவ அவஸ்த்தையை நினைந்து விசனித்து வெய்துயிர்த்தேன்! அவசர அவசரமாக பிரசவ அறையிலிருந்து வெளியே வந்த டாக்டரை ஏக்கத்துடன் நோக்கினேன்! என்னைப் பார்த்த மாத்திரத்தில் அவரது முகச் சாயலில் துயர ரேகைகள் விரிந்தன!

''மிஸ்டர் பிரகாசம், ஞானத்துக்கு மிகச் சிரமமான பிரசவம் இது. எவ்வளவோ முயன்றும் காப்பாற்ற முடியாமப் போச்சு! தாயின் வயிற்றிலேயே சிசு உயிரற்ற சடலமாய்ப் போனதால்தான் இத்தனை சிரமம். அத்தோடு உங்கள் மனைவிக்கு மித மிஞ்சிய பலவீனம்!... எப்படியோ கர்த்தர் அருளால் ஞானமாவது உயிர் பிழைத்தாள்...!'' என்று கவலை தோய்ந்த தொனியில் கூறிய டாக்டரின் வார்த்தைகள் என்னுள்ளத்தைத் துளைத்தன! மிதமிஞ்சிய சஞ்சலத்தால் கதிகலங்கி, மதி மயங்கி, விம்மி வெதும்பியவாறே விரைந்தோடினேன் ஞானத்தை நோக்கி!...

கலக்கமும் மயக்கமும் கலந்து பரிதாப நிலையில் கிடந்த ஞானம், என்னைக் கண்டதும மென்மேலும் உருகிக் கரைந்து, உள்ளம் வருந்தினாள்!...'' ஐயோ... அத்தான், இதைவிட நான் செத்திருந்தாலும் எவ்வளவோ நிம்மதி!... மரணாவஸ்தையை அனுபவவிச்சும் பயனில்லாமல் போச்சே!' என்றலறித் துடித்து—அலை மோதித் தவித்த ஞானத்தின் அவல நிலை என்னைப் பேதலிக்கச் செய்தது! கண்ணீரும் கம்பலையும் நிரம்பிய அவளது நெருக்கடி நிலைமை என்னை நெக்குருக வைத்தது!

எங்களிருவரின் கலக்கத்தையும் உருக்கத்தையும் கண்ணுற்ற டாக்டர், மிஸ்டர் பிரகாசம், சிசுவை இழந்து அழுது வழியும் உங்கள் துணைவிக்கு தேறுதல் கூறி—தெம்பூட்ட வேண்டிய நீங்களே இப்படிவருந்தலாமா? சும்மா அழாதே அம்மா ஞானம்!... மிஸ்டர் நான் ஒரு நல்ல வழி சொல்லுறேன்; அதன் படி கேட்டீங்கனா உங்களிருவரோட துயரும் நீங்கிடும்!... அதாவது, மூனு நாளைக்கு முன்னே-ரோஸின்னு ஒரு ஏழைப் பொண்ணு, பிரசவத்துக்குப் பின் இறந்து போனாள்!... ஆனால், அவள் பெற்றெடுத்த குழந்தையோ உயிர்ப் பிழைச்சிருச்சு! ரோஸியோட குழந்தையை ஆதரிக்க ஒருவருமில்லாததால் அந்தக் குழந்தையை நீங்கள் வளர்த்து வாழ்வளிக்கலாந்தானே?... சாதி சமயம், உயர்வு தாழ்வு முதலிய பேதங்களின்றி தெய்வமாய்த் திகழும் குழந்தை உள்ளங்களில் தானே அருளுலக அரசு வீற்றிருக்கின்றது...! ரோஸியோட குழந்தையை தேவனருளிய தெய்வக் குழந்தையாய் ஏற்று, காப்பாற்றி கரைசேர்த்தீங்கனா உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு!' என்று கூறிக் கொண்டே ஞானத்தையும் என்னையும் மாறி மாறிப் பார்த்தார்!

பரிவும் கருணையும் ஒரு சேர நிறைந்திருந்த டாக்டரின் வார்த்தைகளை மறுத்துக் கூற மனமின்றி மௌனமான நான், 'ஞானம் என்ன சொல்லுவாளோ?' என்ற ஐயத்துடன் அவளை நோக்கினேன்! அவளது பார்வையில் இனந்தெரியாத பெருமிதம் தெளிந்தது! சொர்க்கத்தின் கதவுகளை திறந்துவிட்டாற் போன்றதொரு உன்னத உணர்ச்சியின் எழுச்சியால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்! அடுத்த வாரத்தில் இல்லம் திரும்பிய ஞானம், ரோஸியின் குழந்தையோடு அடியெடுத்து வைத்தாள்!

என் அன்பு மனையாள்—ஞானத்தின மடியிலே துயின்று, மார்பிலே தவழ்ந்து, தோள்களிலே துள்ளி விளையாடி, எல்லையில்லா இன்பக் கலகலப்பை உதயமாக்கியது குழந்தைச் செல்வம்! குளிர் நிலவின் பொற் கதிர்களாய் ஒளிர்த்த குழந்தையின் மலர் மேனியும், தாரகைகளாய்ப் பளபளத்த புத்தொளிப் பிழம்பு விழிகளும் என்னுள்ளத்தை கொள்ளை கொண்டன! மலரினுள் மலராய் பூத்து மலர்ந்த புது மலராய்த் திகழ்ந்த தெய்வச் செல்வியின குங்கும வண்ண வதனமும் கொவ்வைச் செவ்விதழ்களும் என் இதயத்தில் தெவிட்டாத தெள்ளமுதை அள்ளிச் சொரிந்தன! அடிக்கொரு தடவை மீறிட்டழுத செல்வச் செல்வியின் 'குவ்...குவ்வா'' என்ற நளின குரலும், அதைத் தொடர்ந்து ஞானத்தின் ''ஆராரோ... ஆராரோ!'' என்ற தாலாட்டுப்பாட்டும் என் மனத்தின் அடித் தளத்தையே தொட்டன!

'அத்தான், ''குழந்தைகளோட வாழ்வுதான் அருளுலக அரசு; அது தான உண்மையான பரலோக இராட்சியம்!' எனறருளிய பரம பிதாவின் பொன் மொழியின் ரகசியம் இப்பதான் என் மனசுக்குப் புரிஞ்சுது!...மாட்சிமை மிக்க இயேசு ரட்சகனின் பேரருளால் நம்ம வாழ்விலும புத்துலகம் பூத்திருச்சு!'' என்று வியந்து மொழிந்தவாறே ஞானம், பச்சிளம் பாலகனின் உச்சியில் முத்த மழையைப் பொழிந்தாள்! அவளது வதனத்தில் இன்ப உணர்ச்சியோடு கூடிய மகிழ்ச்சி பளிச்சிட்டது!

'ஞானம், காலங் காலமாயக் கங்குலால் மறைந்து, காரிருள் பரவிக் கிடந்த நம் வாழ்வில் அருணோதயம் ஆரம்பித்து விட்டது! அன்பும் அருளும் நிறைந்து, இல் வாழ்வின் பண்பையும் பயனையும் அடைந்து பிறவியின் முழுமையையும் இனிமேல் தானே காணப் போகின்றோம் நாம்? கடந்த ஐந்தாறு ஆண்டுகளாய்த் தெய்வமில்லாத வெற்றிடமாய்—வெறிச்சோடிக் கிடந்த நம்ம குடும்பக் கோவிலுக்கு நித்தியத் தெய்வம—இந்தப் பத்தரை மாற்றுத் தங்கம் தானே நம்ம வீட்டுக்குத் தெய்வ ஒளியைச் சுடர்த்திடப் போகும் தேவனின் பிரதி பிம்பம் தானே இந்தத் தெய்வக் குழந்தை!' என்று கிசு கிசுத்த வண்ணம் சிசுவின் மாசு மறுவற்ற பொன் மேனியை ஆர்வத்துடன அரவணைத்துப் பூரித்தேன்!...

(யாவும் கற்பனை)

## வரப் பெற்றோம்

'கதிரமலைப்பள்ளியிருந்து: வயந்தன் பாட்டுடன, நாற்று நடுகைப பாட்டும் அருவி வெட்டுப பாட்டும் சேர்த்து தொகுககபபட்ட மேறபடி நூல் கிடைககப் பெற்றோம. இந் நூலைத் தொகுத்து வெளியிட்டவர்; திரு. சி. மூ. முத்தையன், உறுஞவளை சித்தவு கேணி.

உலக நண்பர்கள்
(11 வது ஆணடுமலர்)
வெளியீடு: கலைச்செல்வம் பதிபபகம, 43, நுவரெலியா வழி, வெளிமடை.

உலக நணபர்கள் 11வது ஆணடுமலர், உலகத் தமிழ நட்பு மலராக வெளிவந்துளளது. உலகெங்கும பரநது வாழும தமிழர்களைப் நணபாகளாகி பரஸ்பரம தொடர்பு கொணடு ஒருவர் பிரச்சினையை மறறவர் அறிநது கொள்வதற்கு ஒரு தூதாக 'உலக நணபாகள' விளஙகுகிறது.

—

உண்மை
விலைசதம்: 15
வெளியீடு: 21, அஸ்கஸ் வத்தை ஒழுங்கை,
கொழும்பு—5

கத்தோலிக்க உலகில் ஏற்படும மறுமலர்ச்சியையும், உண்மைச் செய்திகளையும், தாங்கி இந்நாட்டிலுள்ள கத்தோலிககரால் பிரசுரிககபபடும் முதலாவது சஞ்சிகையாக வெளிவந்துள்ளது ''உண்மை.'' கத்தோலிகக மக்களின் உரிமைப் பாதுகாவலனாக இவ்வேடு விளஙகும் என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிங்களக்கட்சிகளை இனியும் நம்பிப் பயனில்லை விடுதலைப் போர் தீவிரமாக வேண்டும்"

## பாட்டாளி புரத்தில் இராசமாணிக்கம் முழக்கம்!

'தமிழ் பேசும் மக்கள் சிங்கள அரசியல் தலைவர்களையோ அவர்களது கட்சிகளையோ நம்பி வாழலாம் என்று இனி ஒரு போதும் கருதக்கூடாது. நாம் எப்பொழுதும் விழிப்புடனிருந்து எமக்கு எதிராக சிங்கள ஆட்சி எடுக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தவேண்டும். இன்றையகட்டத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை தீவிரமாக நடத்த தமிழரசுக்கட்சி தயாராக இருக்கிறது"

—இவ்வாறு மட்டுநகர் பாட்டாளிபுரத்தில் இம்மாதம் 3ம் திகதி நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பிரமாண்டமான பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பட்டிருப்பு எம். பீ. திரு. சி. மூ. இராசமாக்கணிம் தெரிவித்தார்.

தேசிய அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சி வெளியேறிய பின்னர் மட்டுநகரில் முதன்முதலாக நடை-



பெற்ற கட்சியின் பிரசாரக் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

கூட்டமைதானத்துக்கு தமிழரசுத் தலைவர்கள், மங்கள வாத்தியங்கள் முழங்க மட்டுநகர் வீதிகளினூடாக ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர். வழிநெடுக கூடி நின்ற பொதுமக்கள் வீட்டுக்கு வீடு நிறைகுடம் வைத்து மாலையிட்டு தலைவர்களை வரவேற்றனர்.

கூட்டத்துக்கு மட்டுநகர் எம்.பி.செ.திரு.இராசதுரை தலைமைவகித்தார். திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது:—

"காலத்துக்குக் காலம் தோன்றிய சிங்கள அரசாங்கள்களுடன் தமிழரசுக்கட்சி ஒப்பந்தம் செய்த போதெல்லாம், நானும் அதில் பங்கு கொண்டு வந்துள்ளேன். ஆனால் இவற்றில் ஒரு ஒப்பந்தம் தானும் பூரணமாக நிறைவேற்றப்படவில்லை.

"இந்நிலையில் இனியும் சிங்களத்தலைவர்களை நம்பியிராது தமிழினம் தனது விடுதலைப் போர்ராட்டத்தில் மேல் நோக்கி முன்னேற வேண்டியதுதான். விடுதலைப்போராட்டத்தை விட்ட இடத்திலிருந்து தொடர்வதற்கு நாம் இன்று ஆயத்தமாக இருக்கிறோம்.

"ஆனால் தமிழ் மக்கள் அதற்கு தயாராக இல்லையென்பதை நான் வருத்தத்துடன் கூறவேண்டியவனாயிருக்கிறேன். மக்கள் அற்ப சொற்ப சலுகைகளை ஆட்சியிடமிருந்து பெற்றுத் தரும்படி எம்மை நிர்ப்பந்தப்படுத்தாமல் இருந்தால்

இனத்தின் நன்மை கருதி நாம் உரிமைப்போராட்டத்தில் தயக்கமின்றி குதிக்கமுடியும்"

### அமிர் முழக்கம்

வட்டுக்கோட்டை பா.உ. திரு. அ. அமிர்தலிங்கம் பேசும்போது கூறியதாவது:—

"நாம் ஐ. தே. கட்சியுடன் தமிழினத்தின் நன்மைக்காக செய்து கொண்ட ஒப்பந்தத்தை சீராக அமுல் நடத்த வேண்டுமென்பதற்காக கடந்தமூன்றரை ஆண்டுகளாக கட்டுண்டோம்; பொறுத்திருந்தோம். இது நாமே நமக்கு விதித்த சட்டுப்பாடு. ஆனால் ஒப்பந்தப்படி காரியம் ஆகவில்லை. எனவே தான் மீண்டும் போராடத் தயாராகிவிட்டோம்.

"கோணேஸ்வரப் புனித நகர் சம்பந்தமாக தமிழ் அமைச்சர் ஒருவர் செய்த ஏற்பாட்டைஎதிர்த்து புத்த பிக்கு ஒருவர் கடிதம் எழுதியவுடன் பிரதமர் டட்லி நிறுத்திவைத்தார். இதே போல முன்பும் பௌத்தபிக்குகள் சிலர் எதிர்த்தவுடன் பண்டா—செல்வா உடன்படிக்கையை காலஞ்சென்ற திரு. பண்டாரநாயகா கிழித் தெறிந்தார்.

ஆகவே திரு. டட்லிசேனநாயகாவும் சரி, திருமதி சிறிமா அப்பையாராக இருந்தாலும்சரி, எல்லோரும் சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னங்களே. தமிழ் மக்களுக்கு இன்று வழங்கப்பட்டுள்ள சில உரிமைகளைக் கூட அவர்கள் தாமாகவழங்கவில்லை. தமிழரசுக்கட்சியின் போராட்டத்துக்கு, நெருக்குதலுக்கு அஞ்சியே வழங்கியிருக்கின்றனர்.

"எனவே தமிழினம் தனது உரிமைகளைப்பெறவும், சுயாதீனத்தை பெற்றுக் கொள்ளவும் தமிழரசுக்கட்சிக்குப் பின்னால் நின்று ஒற்றுமையாகப் போராட வேண்டும்"



தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் பேசும் போது கூறியதாவது:-

'ஒரு நாட்டினதும் ஓர் இனத்தினதும் முன்னேற்றத்திற்கு பல்கலைக்கழகங்கள் பெரிதும் உதவுகின்றன. குறிப்பாக கிழக்கு மாகாணம் கல்வித்துறையில் பெருமளவு பின்தங்கி இருக்கிறது. இதனாலேயே தமிழ் பல்கலைக்கழகம் ஒன்றை கிழக்கு மாகாணத்தில் நிறுவ வேண்டுமென்பது எமது கட்சியின் நோக்கமாகும். தமிழ்ப்பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் நிறுவ வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்துவதென்று எமது கட்சி முடிவு செய்துள்ளது.

'வட இலங்கையைச் சேர்ந்த பத்து எம். பிக்களும் கிழக்கிலங்கையைச் சேர்ந்த எட்டு எம். பீக்களுமாக மொத்தம் 18 எம். பீக்கள் கைச்சாத்திட்ட மகஜர் ஒன்றை நான் பிரதமரிடம் சமர்ப்பித்துள்ளேன். அதில் தமிழ் பல்கலைக் கழகத்தை திருகோணமலையில் நிறுவ வேண்டுமென்று நாம் பிரதமரைக் கேட்டுள்ளோம்.

"தமிழரசுக் கட்சியினரான நாம் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களாகிய தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காக போராடுகிறோம். ஆகவே தமிழ் பேசும் இனத்திற்காக உருவாக்கப்பட்ட ஒரு கட்சி, தனிப்பட்ட முறையில் 'இந்து பல்கலைக் கழகம்' வேண்டுமென்று கேட்பது முறையல்ல. அப்படிக் கேட்டால் அது தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரிவினையை உருவாக்கும்.

'ஆகவே தான் நாம் நமக்கு இந்து 'பல்கலைக் கழகம்'' வேண்டாம் தமிழ் பல்கலைக்கழகம் தான்வேண்டும் என்று வாதாடுகிறோம்.

'1956-ம் ஆண்டுக்கு பின்னர்தான் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களுக்காக செயல்பட ஆரம்பித்தது.

1956-ம் ஆண்டின் பின் தமிழ் இனத்தின் உரிமைகளுக்காகப் போராடக் கூடிய கட்சி தமிழரசுக்கட்சி தான், என்பதை இந் நாட்டின் தமிழ் பேசும் இனமே முடிவு செய்தது. 1956-ம் ஆண்டின் பின்னர் இந்த நாட்டில் எந்த ஒரு கட்சியையும் அரசாங்கத்தை ஏற்று நடத்துவதற்கு ஆதரவு அளித்தகட்சி தமிழரசுக் கட்சிதான்.

'1965ம் ஆண்டின் பொதுத்தேர்தலையடுத்து தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறாத எந்தக் கட்சியும் அரசாங்கத்தை நிறுவ முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சில கோரிக்கைகளை முன் வைத்து ஓர் ஒப்பந்தத்தின் பேரில் அக்கட்சிக்குஇந்நாட்டின் ஆட்சிப்பீடத்தைக்கைப் பற்ற ஆதரவளித்தோம்.

"அந்த ஒப்பந்தங்களில் மாவட்ட சபையும் ஒன்றாகும். "மாவட்டசபை" உருவாகியிருந்தால் தற்போது கச்சேரிகளில் நடைபெறும் வேலைகள் மாவட்டசபையின்கீழ் நடைபெற்றிருக்கும். மாவட்ட சபையால் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல சிங்களவர்களுக்கும் நன்மைகள் உண்டு. அப்படி சிங்கள மக்களுக்கும் நன்மைகள் இருந்தபோதிலும், தமிழ் மக்களுக்கு நன்மைகள் ஏற்படக் கூடாது என்பதற்



காகவே, சில அரசியல் கட்சிகள் மாவட்ட சபையை எதிர்த்தனர்.''

கூட்டத்தில், திருவாளர்கள் வி. தர்மலிங்கம் பா. உ., சி. கதிரவேற்பிள்ளை பா. உ., திருமதி மங்கயர்க்கரசி அமிர்தலிங்கம், கே. திருநாவுக்கரசு, வி. பாலசிங்கம், ஜி. பி. வின்சென்ற், கே. இராசநாயகமுட்பட பலர் பேசினர்.

---

## சகல பொலீஸ் நிலையங்களிலும் தமிழில் வாக்குமூலம்!

"வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமுள்ள எந்தப் பொலீஸ் நிலையத்திலும், ஒரு தமிழ் பேசும் பிரஜை தமிழிலேயே வாக்கு மூலம் அளிப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு தமிழ்ப்பிரஜையினதும் சட்டரீதியான உரிமையாகும்.ஒவ்வொரு பொலீஸ் நிலையத்திலும் குறைந்தது இரண்டொரு பொலீஸ் அதிகாரிகளாவது தமிழ் வாக்குமூலங்களைப் பதிவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்"

—இவ்வாறு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெரிக் அபயகுணவர்த்தன கடந்த வாரம் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் மாநாடொன்றில் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

தமிழில் வாக்குமூலமளிக்கவும், தமிழில் அவற்றைப் பதிவு செயயவும், நாடுமுழுவதும் உரிமையிருக்க வேண்மென்று தமிழரசு எம். பீக்கள் கோரிவந்தது தெரிந்ததே.

---

## கேட்டதும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அல்ல!) நின்று கொண்டு 'வாசிற்றி' பெண்பிள்ளைகளைப் பார்த்து இப்படிப் பாடுவது உலகம் அறிந்த பரம இரகசிய மென்று நமது ஒற்று நிருபர் குறிப்பிடுகின்றார்.

'காணி பூமி, நகை நட்டுகளை அடைவு வைத்தோ, விற்று விட்டோ பெற்றார் வாசிற்றிப் படிப்புக்காக பிள்ளை குட்டிகளை அனுப்பி வைக்க அதுகள் 'லவ்' பாடத்தில் காலத்தைக் கழிப்பது விசர் வேலை, என்று இவைகளை நேரில் கண்ட தந்தை ஒருவர் வருத்தந் தெரிவித்திருக்கிறார்.

மாவட்டங்களில் விவசாயப் போட்டிகளை வைத்து உணவு உற்பத்தியில் விவசாயிகளின் அறிவைப் பெருக்குவதற்கு விவசாயப் பகுதியினர் எடுத்திருக்கும் நடவடிக்கை வரவேற்கத் தக்கது. மன்னார் மாவட்டத்தில் நடத்தப்பட்ட விவசாயப் போட்டியை 29-10-68இரவு [illegible] கேட்டோம். இதனை விவசாயப் பகுதியைச் சேர்ந்த

---

## சிங்களத்தையும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகர் ஒருவருக்கு ரூபா 50,000சுதந்திரக்கட்சியால் வழங்கப்பட்டதாகவும் மற்றோர் சிறுபான்மைத் தமிழ்ப் பிரமுகர் சுதந்திரக் கட்சியின் இத்தமிழ் விரோத நடவடிக்கைக்கு இணங்க மறுத்துவிட்டதாகவும் அறியப்படுகிறது.

அடுத்த பொதுத்தேர்தலில்கூட்டுக்கட்சிகள் வெற்றி பெற்று ஆட்சியமைத்தால், பௌத்த சிங்களவர்களாக, இன மத மாற்றம் செய்யும் சிறுபான்மைத் தமிழர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படுமென்றும் சு. கட்சித் தலைவர்கள் உறுதியளித்திருக்கிறார்களாம்.

---

சிறிபத்மநாதன் அவர்கள் நடத்தி வைத்தார்கள். நிகழ்ச்சி கேட்பதற்கு ரசித்தது.

1-11-68 இரவு 9-30 மணியிலிருந்து 10-30 மணிவரை ராம் குமாரசாமி அவர்களின் இசைக் கச்சேரி இருந்தது. எங்கள் நாட்டிலும் தரமான பாடகர்கள் ஒரு சிலராவது இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்க அவர் போன்ற படாகர்களுக்கு நிறைய 'சான்ஸ்' கொடுக்கப்பட வேண்டியது இ. ஒ. ப. கூ. தாபனத்தாரின் கடமை என்பதை வலியுறுத்துகிறோம்.

## அமெரிக்காவின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுவைட் டி. ஐஸன்ஹோவர் 1952ல் ஜனாதிபதிதேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட போது திரு. நிக்சன் துணை ஜனாதிபதி பதவிக்கு நியமனம் பெற்று தேர்தலில் வெற்றியீட்டினார். 1956ல் நடைபெற்ற தேர்தலிலும் போட்டியிட்டு மீண்டும் துணை ஜனாதிபதியானார். இரண்டு முறை துணை ஜனாதிபதியாக இருந்தமையினால் உலகிலும் எள்நாட்டிலும் பெரும் புகழ் பெற்றார்.

குடியரசுகட்சி 1960ம் ஆண்டில் நடைபெற்றதேர்தலின் போது திரு. நிக்சன் அவர்களை தனது வேட்பாளராக நிறுத்தியது. செனட்டர் ஜோன் எப். கென்னடியிடம் சிறிது வாக்கு வித்தியாசத்தில் தோற்றார். கலிபோர்னியாவுக்கு திரும்பச் சென்று வழக்கறிஞராக வாழ்ந்தார். 1962ம் ஆண்டில் கவர்னர் தேர்தலில் தோற்றியும் வெற்றி பெற முடியவில்லை. நியூ யார்க் நகரம் சென்று சட்டத்தொழிலைத் தொடர்ந்தார்.

பட்ரீஷியா ரயன் என்ற பெண்ணை நிச்சன் மணந்தார். பட்ரீஷியா, ஜூலி என்ற இரு புதல்விகள் இவருக்குள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்காளர் தேர்விலும் பாரபட்சமா?

**கணக்காளர் தேர்விலும் அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறதா? இக் கேள்வி அரசாங்க ஊழியர் வட்டாரத்தில் எழுந்துள்ளது.**

இந்த ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற 4 வது வகுப்பு கணக்காளர் பரீட்சையின் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் 45க்கு அதிகமானோர் தெரிவு செய்யப்படவில்லையென்றும் பொதுவாக நேர்முகப்பரீட்சைக்கு தகுதியானவர்கள் என அழைக்கப்படுவோர் அனைவரும் நிரந்தர அல்லது உதவிக் கணக்காளர்களாக தெரிவு செய்யப்படுவதே இதுவரை கடைப்பிடிக்கப்பட்டு வந்த முறையென்றும் சொல்லப்படுகிறது.

4-வது வகுப்பு கணக்காளர் பதவிக்கு சுமார் 80 இடங்கள் காலியாக இருப்பதாகவும் தெரிகிறது. இது குறித்து பொது சேவைக் கமிஷனுக்குப் புகார் ஒன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

# எழுத்தாள நண்பர்களுக்கு

இன்று நம்முடைய இளைஞர்கள் மத்தியில், அளவுக்கதிகமான எழுத்தார்வம் தலையெடுத்துள்ளது. புனை கதை, நாவல், கவிதை நகைச்சுவை, போன்ற பல்வேறு துறைகளில் ஏதாவது ஒரு துறையில் முன்னுக்கு வந்து விட வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு வளர்ந்து வரும் தமிழ் பேசும் இளைஞர்சமுதாயத்தில் நிறைய ஏற்பட்டுள்ளது. இந்த ஆர்வத்தையும், துடிப்பையும் நல்ல முறையில் பயன்படுத்தி, தமிழ் மொழியில் புதிய எழுத்தோவியங்களை உருவாக்குவதற்கு ஊக்கம் அளிப்பது இந்நாட்டு ஏடுகளின் தலையாய பணியாகும்.

இந்த நாட்டில் முதன் முதலாக அப்பணியைச் செய்தது சுதந்திரன் தான் என்று கூறிக்கொள்வதில் பெருமையடைகிறோம். இன்று முன்னணியிலுள்ள எழுத்தாளர்கள் — அவர்கள் இன்று பல்வேறு திசைகளில் இருந்தாலும் —சுதந்திரன் பண்ணையில் உருவாக்கப் பட்டவர்கள் தாம்.

கடந்த சில ஆண்டுகளுக்கிடையிலே தமிழ் பேசும் சமூகத்தில் புதிய புனைகதையாளர்கள், கவிஞர்கள், மற்றும் எழுத்தாளர்கள் நூற்றுக்கணக்கில் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எல்லோரையும் சுதந்திரன் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்க முடிவு செய்துள்ளோம். இப்படிச் செய்வது வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களின் முதுகில் தட்டிக் கொடுத்து அவர்களை ஊக்குவிக்க உதவும் என்று நம்புகிறோம்.

எனவே இப்பகுதியை நன்கு உபயோகித்துக் கொள்ளும்படி வளர்ந்து வரும் புதிய இலக்கிய பரம்பரையினரைக் கேட்டுக் கொள்ளுகிறோம். எழுத்தாளநண்பர்கள் தங்களைப்பற்றிய விபரங்களுடன், தங்களுக்கு பிடித்த —நூல்கள், எழுத்தாளர்கள், போன்ற விபரங்கள் —பிடிக்காதவிஷயங்கள்— எழுதிய கதைகள்போன்ற பல்வேறு விபரங்களையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவைப்பார்களாக. அத்துடன் தங்கள் புகைப்படப் பிரதியொன்றும் சேர்த்து அனுப்பப்பட வேண்டியது அவசியம்.

விபரங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:- எழுத்தாளர் அறிமுகம், சுதந்திரன், த. பெ. இல 1183, கொழும்பு.

ஆ—ர்.

# பலாங்கொடையில் வாழும் தமிழர்களின் பிரச்சினைகள்!

தமிழ் மக்கள் சிறுபான்மையினராக பலாங்கொடைத் தொகுதியில் வாழ்ந்தாலும் 20,000த்திற்கும் மேற்பட்டவராகத் தொகுதி முழுவதும் பரந்து வாழ்கின்றனர். பாடுபட்டுழைக்கும் பாட்டாளிப் பெருமகன் முதல் பணம் படைத்த பெரும் தோட்டங்களின் உரிமையாளர்கள்வரை தமிழர்கள் வாழும் இடம் பலாங்கொடை.

1960-ம் வருடம் தேர்தற் தொகுதிகள் பிரிக்கப்படும் வரை இரு அங்கத்தவர் தொகுதியாயிருந்தது பலாங்கொடை. இரு அங்கத்தினரும் சிங்களவராகத் தெரியப்பட்டிருப்பினும் ஒரு தமிழரும் அங்கத்தவராகத் தெரியப்படவே சோல்பரிக் கமிஷன் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தது.

மலையகத்தில் அதுவும் குறிப்பாக இரத்தினபுரி மாவட்டத்தில் அதிக தமிழரை உள்ளடக்கிய பலாங்கொடையில் ஒரு தமிழ்ப் பாடசாலை எல்லா வசதிகளையுமுடையதாயில்லாமலிருப்பது பெரும் குறையாகும், இக்குறை பல வருடங்களாக இருந்து வருகின்றது. இதை நிவிர்த்தி செய்யப் பலர் முயன்றும் வந்தார்கள். இன்றோ நிலைமை மாறிவிட்டது. தத்தமது சுயநலத்திற்காகப் பல குழுக்களாகப் பிரிந்து ஒரு சாரார் செய்வதை மறு சாரார் எதிர்த்து முறியடிப்பது சர்வசாதாரணமாகி விட்டது.

பல்வேறு குழுக்களை அமைப்பதுகவலைக்கிடமானதென்று சொல்ல முடியாது. ஒவ்வொருவரும் தத்தம் விருப்பப்படி எதையும் செய்யலாம், ஆனால், ஒரு நல்ல விடயத்தில் அதுவும் கல்வி விடயத்தில் தமது பலத்தைப் பரீட்சிப்பது விரும்பப்படக்கூடியதல்ல. பலாங்கொடையிலுள்ள தமிழ்ப் பெற்றோர் இதை உணர வேண்டும். உணர்ந்தால்மட்டும் போதாது அதற்கேற்றவாறு ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். அப்படியின்றி மேலும் மேலும் பிரிவை வளர்த்துப் போட்டியிடுவது தமது பிள்ளைகளின் வருங்காலத்தைப் பாதிப்பதாகவே முடியும்.

பல தோட்டப் பாடசாலைகள் பலாங்கொடையிலிருக்கின்றன. அவற்றில் உயர் கல்வியைப் பெற முடியாது. அப்படியிருக்கையில் ஒரு உயர்நிலைப்பள்ளியைஅமைப்பதில் காலதாமதம் காட்டுவதோ, தடைகள் விதிப்பதோ ஏற்புடையதல்ல.

பலாங்கொடையில் ஒரு தமிழ் மகாவித்தியாலயம் அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்படும் என்று பல வருடங்களாகக் கூறப்பட்டு வந்தது உண்மை. ஆனால், நடைமுறையில் செய்யப்பட்டது என்ன?

இடவசதியும், தளபாட வசதியுமற்ற சீ. சீ. தமிழ்ப் பாடசாலையை இருநேரப் பாடசாலையாக்கி மாலையில் உயர் வகுப்புகள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது, இது ஒரு தற்காலிக ஏற்பாடே. கட்டிட வசதியின்மையாற் சட்டப்படி சீ. சீ. தமிழ்ப் பாடசாலையை மகா வித்தியாலயமாக்க முடியாதென்று கல்விப் பகுதி கை விரித்து விட்டது. அதனால் க. பொ. த. ப. உயர்தர வகுப்பில் பயில விரும்பும் மாணவர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

பெரிய கட்டிடமொன்று கட்டிக் கொடுக்கப்பட்டால் கல்விப் பகுதி மகாவித்தியாலயமாகச் சட்டப்படி பிரகடனப்படுத்தும். ஆகவே பலாங்கொடைத் தமிழ்ப் பெற்றோரும், மற்றோரும் சொந்தக் குரோதங்களை மறந்து பலாங்கொடையில் பல வசதிகளும் கொண்ட மகாவித்தியாலயமொன்று அமைக்க முன்வர வேண்டும்.

பாடசாலையில்லாத குறையொன்றிருக்க, இருக்கும் அரைகுறைப் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றுக்குறை இருக்கின்றது. இக்குறையை நிவிர்த்தி செய்ய உடனடியாகக் கல்விப் பகுதியினருடன் தொடர்பு கொள்ள வேண்டியது தமிழ்ப் பெற்றோர் கடனாகும். கல்விப் பிரச்சினையை ஒற்றுமையுடன் தீர்த்து வைத்தால் பலாங்கொடைத் தமிழ்ச் சிறார்களின் அறிவுக் கண்ணைத் திறந்துவிட்ட பெருமையை அடையலாம். அத்துடன் பலாங்கொடையில் எமது கலாச்சாரத்தை வளர்க்க உதவியதுமாகும்.

த. ம. இலிங்கமாறன்,
பலாங்கொடை.

## மக்கள் குரல்

# பொன்னம்பலத்திடம் ஐந்து கேள்விகள்!

சிறிமா சாத்திரி ஒப்பந்தத்தைப் பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்துவிட்டு வெளியில் அதைக் கண்டித்து வரும் திரு. பொன்னம்பலம் நேரு —சேனநாயக்கா ஒப்பந்தம் ஒன்று இருந்ததாகவும் அதன் கீழ் ஏழு லட்சம் இந்தியத் தமிழருக்குப் பிரஜாவுரிமை கிடைக்க இருந்ததாகவும், அவ்வொபபந்தத்தை சமஷ்டிக் கட்சியினர் பகிஷ்கரித்ததால் அமுல் செய்யப்படவில்லை என்றும் கூறித் திரிகின்றார். அவ்விதம் ஓர் ஒப்பநதம் இருந்திருந்தால்:—

(அ) காலஞ் சென்ற டி. எஸ். சேனநாயக்கா ஐம்பதினாயிரம் பேருக்கே இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்கும். அதற்கு மேல் ஒருவருக்கும் கிடையாதெனக் கண்டிப் பகுதிச் சிங்களத் தலைவருக்கு ஓர் வாக்குறுதி அளித்தாரல்லவா. இதைப் பொன்னம்பலம் மறுப்பாரா?

(ஆ) தீவிர சிங்கள வாதியான கே. எம். இராஜரத்தின, திரு. டி. எஸ். சேனநாயக்கா தான் மலைநாட்டில் பத்துப் பாராளுமன்றஸ்தானங்களைத் தமிழரிடமிருந்து பறித்துச் சிங்களவர் கையில் கொடுத்தாரெனப் பல தடவைகளில் கூறினரே இதைப் பொன்னம்பலம் அறிவாரா? அறிந்தால்மறுப்பாரா?

(இ) 1952-ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் காலத்தில் "லிங்கசாமியும், நங்கசாமியும் போய்விட்டார்கள். இனிமேல் இந்தநாடு புஞ்சிபண்டாவுக்கும், அப்புகாமிக்குமே சொந்தம்" என்று கூறித்திரிந்தாரே இப்போதுஇருக்கும்பிரதமர் டட்லி சேனநாயக்கா. இதைப் பற்றிப் பொன்னம்பலம் என்ன கூறப் போகிறார்?

(ஈ) ஏழு லட்சம் தமிழருக்குப் பிரஜாவுரிமை கொடுக்கும் திட்டத்தை 5 வருட காலம் மந்திரியாக இருந்த பொன்னம்பலம் அமுல் நடத்த ஒரு முயற்சியும் ஏன் எடுக்கவில்லை?

(உ) இப்போது சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தத்தைநிராகரித்துவிட்டு ஏழு லட்சம் பேருக்குப் பிராஜாவுரிமை கொடுக்கும் டி. எஸ். சேனநாயக்காவின் ஒப்பந்தத்தை அமுல் நடத்துமாறு அவரின் புத்திரரும் இப்போதைய பிரதமருமான டட்லி சேனநாயக்காவை பொன்னம்பலம் கேட்பாரா என அறிய விரும்புகிறேன்.

இ. குழந்தைவேலு,
உரும்பராய்.

# இளம் எழுத்தாளர்

திருகோணமலை இளம் எழுத்தாளர் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நடந்த நடப்பு வருட உத்தியோகத்தர்கள் தெரிவில பின் வருவோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

தலைவர்; த. சுந்தரலிங்கம்

உபதலைவர்: வி. இராஜேந்திரம்.

செயலாளர்: புரட்சி பாலன்,


உப-செயலாளர்: மொழி மலைநாதன்.

பொருளாளர்: அ. சச்சிதானந்தன்.

உப-பொருளாளர்: க. கோணேஸ்வரன்.

ஆலோசகர்: திருமதி நா. பாலேஸ்வரி.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம் * நீடிய உழைப்பு
இவற்றிற்கு




டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்பரேசன்
14 டாம் வீதி, கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப் படங்களில்

# கதைப்பிடிப்பு அருகி சதைப்பிடிப்பு பெருகுகிறதே!

## சௌகார் ஜானகி கவலை!

'செக்ஸ் என்றால் என்ன? நமது தமிழ்ப் படங்களில் வருவதெல்லாம் செக்ஸ் தானா? இதற்கெல்லாம் நான் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆனால் 'செக்ஸ்' எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றி நிச்சயமாகச் சொல்வேன்.

பெண்கள் ஆற்றிலும், குளத்திலும் குளிக்கிறார்கள். மார்பை மறைத்துக்கொண்டு ஆற்றிலாகட்டும், குளத்திலாகட்டும் பெண்களும், ஆண்களும் அருகருகே நின்று குளிக்கிறார்கள். ஆண்-பெண் இருவரது தோற்றமும் 'செக்ஸ்' தோற்றம்தான்.



நீச்சல் உடை என்ற பெயரால் குளிப்பது கும்மாளமடிப்பது என்றெல்லாம் தமிழ்ப் படங்களில் சில காட்சிகள், அவை அனைத்தும் 'செக்ஸ்' காட்சிகள் அல்ல. அனாவசியத்தை அவசியமாக்கிய 'புகுத்தல்' காட்சிகள்.

நமது தமிழ்ப் பண்பாடு கெடாமல், மிகைப்படுத்தாமல் காட்டப்படுவதுதான் செக்ஸ்! 'செக்ஸ் அளவோடு கூடியது. அளவுக்கு மீறுவது செக்ஸ் ஆகாது. வெறித் தோற்றம் எனப் பெயர் பெறும்.

ஒரு தாய் தன்னுடைய குழந்தைக்குப் பால்கொடுப்பதுபோல் வரும் படக்காட்சியில் பெண்ணின் மார்பை காட்டலாம்எப்படிக்காட்ட வேண்டும்? ஒரு பெண் தன் குழந்தைக்கு எப்படி பால் கொடுப்பாளோ அப்படித்தான் காட்ட வேண்டும். அதை மிகைப்படுத்தக் கூடாது இலைமறைவு காய்மறைவு என்பார்களே அப்படிக் காட்டவேண்டும் கவர்ச்சியை!

மற்றப்படி எப்படிக்காட்டினாலும் கவர்ச்சியாகாது. கவர்ச்சி என்ற கருத்தில் ஆபாசத்தை சந்திக்கிறோம் என்று சொல்லமுடியாவிட்டாலும் உணரும்படி நேரிடும்.

பலபேர் - தரமானவர்கள் தமது கருத்தை வெளிப்படையாகச் சொல்லமாட்டார்கள். வெளிப்படையாகச் சொல்லாமல், ஆர்ப்பாட்டம் செய்யாமல், படம் பார்ப்பவர்கள் நிச்சயமாக நல்ல குடும்பத்தினர். ஆகவேதான் சொல்கிறேன்: நல்ல குடும்பததினர் பார்க்கத் தக்கதாக கவர்ச்சியைக் காட்ட வேண்டும்.

பெரும்பாலானபடங்களில் கதைப் பிடிப்பு எதுவும் இருப்பதாகத்தெரியவில்லை. சதைப் பிடிப்புக் கவர்ச்சி நிறைய இருக்கிறது.

இந்தக் கவர்ச்சிகுறைந்து, கதைக்கு மதிப்பளிக்கும் நேரம் எவ்வளவு சீக்கிரம் வந்தாலும் வரவேற்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரை தமிழ்ப்பட உலகம் உருப்பட வேண்டும் என்பதில் நிரம்ப ஆசை!

# திரைவாணன் பதில்கள்

போல்
எகலியகொட.

கே: ஜெயலலிதாவின் விலாசம் என்ன?

ப: 8/1 சிவஞானம் ரோட், சென்னை-17.

ஃ

எஸ். எம். சாம்பிளவாசகம்
குயின்ஸ்டவுன்,
ஆலி—எல.

கே: ரவிச்சந்திரன், ஜெய்சங்கர் இருவரும் எத்தனை படங்கள் நடித்துவிட்டார்கள்?

ப: ஜெய்30படங்களிலும், ரவி 20 படங்களிலும்!

ஃ

ஆ. சிவசுப்பிரமணியம்
கோப்பாய்.

கே: ''காவல்காரன்'' ''பணமா பாசமா'' ஆகிய படங்களில் சென்னையில் அதிக வசூல் பெற்ற படம் எது?

ப: காவல்காரன்!

ஃ

ஆரயம்பதி,
புதுமைப்பித்தன்.

கே: இந்தியாவில் எம். ஜி. ஆர். நடித்த ''இரகசியப் பொலிஸ் 115'' எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 100 நாட்கள் ஓடவில்லை!

ஃ

ஆர். தங்கலிங்கம்
நல்லூர்.

கே: 'குடியிருந்தகோயில்' என்னும் படம் சென்னையில் எத்தனை தியேட்டர்களில் 100 நாட்கள் ஓடியது?

ப: மூன்று தியேட்டர்களில்!

ஃ

சு. தவராசா
நாவலப்பிட்டி.

கே: பத்மஸ்ரீ கணேசன் நடித்த 'கலாட்டா கல்யாணம் தென்னகத்தில் எத்தனை நாட்கள் ஓடியது? அது வெற்றிப்படமா?

ப: 100 நாட்களுக்கு அதிகமாக ஓடிய வெற்றிப் படம் அது!

ஃ

வீ. கருணாநிதி
தலவாக்கொல்லை.

கே: மக்கள் திலகம் எம். ஜி. ஆர். நடித்த ரகசிய பொலிஸ் 115, வெற்றிப் படமா?

ப: ஆம்!

ஃ

கே: சண்முகராசா
எஸ். பி. பாண்டியன்.
செங்கலடி.

கே: மக்கள் திலகம் தற்போது எத்தனை படங்களில் நடிக்கிறார்?

ப: சுமார் 20 படங்களில்!

ஃ

தாளையூர் முருகுப்பிள்ளை,
தாழங்குடா.

கே: இரு மலர்கள் படத்தில் கே. ஆர். விஜயாவின் நடிப்பைக் கண்டு நடிகையர் திலகம் என்ன நினைப்பார்?

ப: தன்னிடத்திற்கு ஏற்ற நடிகையென்றெண்ணி இன்னும் ஒருபடி பூரிப்பால் உப்பியிருப்பார்.

ஃ

எஸ். எம். சின்னலெவ்வை,
மக்காமடி ஏறூவூர்-1.

கே: பி. சுசீலா குழுவினரால் முத்து மண்டபம் படத்திற்காகப் பாடப்படும் 'கன்னிப்பெண்ணைக் கைபிடித்து' என்ற பாடல் அல்லி படத்திலே என்று வானொலியிலே அறிவிக்கின்றார்களே! இது யார் மீது உள்ள தவறு?

ப: தவறில்லை. இரு படங்களும் எஸ். எஸ். ஆருடையவை. அதனால் ஏற்பட்ட பாடல் பரிமாற்றம்தான்.

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: எங்க ஊர் ராஜா படத்தில் சிவாஜி எத்தனை வேடங்களில் நடிக்கிறார்?

ப: மூன்று வேடங்களில்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: மேஜர் சுந்தரராஜனின் முகவரி என்ன? புகைப் படம் கேட்டு எழுதினால் அனுப்புவாரா?

ப: மேஜர் சுந்தரராஜன், பிரகாஷ் ராவ் ரோட், பாலாஜி நகர், ராயப் பேட்டை, சென்னை. இவ் விலாசத்திற்கு எழுதிப் பாருங்கள்.

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83
கொழும்பு.

## எலியைக் கண்டால் பயம் இவருக்கு!

'தோட்டத்தில் பாப்பு அம்மா! என்று அலறியபடியே ஓடிவந்தார் நடிகை புஷ்பலதாவின் வீட்டு வேலைக்காரி.


எங்கே? என்றபடியே கையில் தடியுடன் ஓடினார் புஷ்பலதா! பச்சை பசேலென்று வளர்ந்து விட்டிருக்கும் புல் தரையில் பாம்பு எங்கேயுள்ளது என்று எப்படி கண்டு பிடிக்க முடியும்? 'பாம்பு எங்கோ ஓடிப் போய்விட்டது! என்றபடியே திரும்பினார் புஷ்பலதா.

அவரின் துணிச்சலை மெச்சிய அவரது தோழி 'புஷ்பா, நீங்கள் மிகவும் தைரியசாலி பாம்பு என்றால் படையும் கலங்கும் என்பார்கள். ஆனால் நீங்கள் பாம்பு என்றதும் சர்வ சாதாரணமாக அதை அடிக்கச் சொல்லுகிறீர்களே, எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது' என்று கூறினார்.'

'புலியை முறத்தால்விரட்டிய பெண்குலத்தைச் சேர்ந்த இவருக்கு... தவிர மற்ற எதைக் கண்டாலும் பயமில்லை! என்று கூறினார் ஒப்பனையாளர் கிருஷ்ணராஜ்.

'எதை' என்று ஆவலோடு வினவினார் அவருடைய தோழியும்.

சிரித்துக்கொண்டே 'எலியைக் கண்டால்! என்றார் புஷ்பலதா.



## பாலையா ஒரு தவுலய்யா!

'பாலையா இல்லாத படம் பாழாய்யா' என்றதொரு நிலையை ஒரு காலத்தில் உருவாக்கி வைத்திருந்தவர் டி. எஸ். பாலையா. இன்றோ 'பாலையா உள்ள படம் பால்' என்று ரசிகர்களை கூறவைத்திருக்கிறார். தன் நடிப்பாற்றலால்.

எந்தவொரு வேடத்தையும் கச்சிதமாகச் செய்யும் பாங்கினைப் பெற்றவர் பாலையா என்பதற்கு சமீபத்தில் கிடைத்த ஒரு தகவலும் சான்றாகவுள்ளது.



சௌத்ரி என்ற பெரியவரொருவர், பாலையாவைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்ததைக் கேட்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது.

சௌத்திரி வேறு யாருமல்ல: 'தேன் நிலவு' வசந்தியின் அப்பா!

அவர்களுடைய வீடு சென்னை, தியாகராஜநகர் அருளாம்பாள் வீதியில், டி. எஸ். பாலையாவின் வீட்டுக்குப் பக்கத்திலிருக்கிறது.

பக்கத்து வீட்டு அனுபவத்தை வைத்துக் கொண்டு சௌத்ரி சொன்னதாவது:

''இரண்டு மாதங்களுக்கு முன்னால் திடீரென அதிகாலையில் தவுலடிக்கும் சத்தம் கேட்டது. பிறகு நாள் தோறும் அதே நேரத்தில் தவுலடிக்கும் சத்தம் கேட்கத்தொடங்கியது. நாதஸ்வரமில்லாமல் தவுலடிக்கும் சத்தம் மட்டும் தினசரிகேட்கிறதே, பக்கத்தில் யாராவது தவுலடிக்கும் கலைஞர் குடி வந்திருப்பாரோ என்று எண்ணினேன்.

பிறகு பார்த்தால், அது பாலையாவின் வீட்டிலிருந்து தான் கேட்டது. தவுல் வித்வான் அங்கு வரப்போக இருந்தார்கள். மெதுவாக விசாரித்தேன். ''தில்லானா மோகனாம்பாள்' படத்தில் பாலையா தவுல் வித்வானாக நடிப்பதாகவும், அதற்காக சாதகம் பண்ணிக் கொள்வதாகவும் தெரிந்தது, உண்மையிலேயே நான் மனத்திற்குள் அவரைப் பாராட்டினேன். நடிகரென்றால் அப்படியல்லவா இருக்க வேண்டும்!'

பாலையாவை செல்லமாக 'தவுலய்யா' என்று அழைக்கலாமல்லவா?


---

## பெயர் பொருத்தம்

திரை உலகில் பெயர் பொருத்தம் உள்ள தம்பதியர் ஒருவரைத் தான் சொல்லலாம். கே. ஆர்: விஜயாவின் இயற் பெயர் தெய்வயானை. அவர் கணவரின் பெயர் வேலாயுதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 ஞாயிறு முதல்




# 5 - வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)


விஜயா (மட்டுநகர்) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

எம் ஜி ஆர். சரோஜாதேவி

அசோகன் நம்பியார்

ஜி. சகுந்தலா —நடிக்கும்—

## பறக்கும் பாவை




இப்பொழுது காட்சி தருகிறது கெப்பிட்டல் (கொழும்பு) **பாலும் பழமும்**

# 4-வது வெற்றி வாரம்

செல்லமகால் (கொழும்பு) ஈரொஸ் (பாமன்கடை) நெல்சன் (திருமலை) பிறின்செஸ் (அட்டன்) றீகல் (கண்டி) றீகல் (நூரளை) வின்சர் (யாழ்நகர்)

* சிவாஜி, * பத்மினி, * கே. ஆர். விஜயா, * நாகேஷ்

—நடிக்கும்—

## இரு மலர்கள்





**விரைவில் எதிர்பாருங்கள்**

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார், அசோகன், நிர்மலா, புஷ்பமாலா, பசுபதி

—நடிக்கும்—

## ரகசிய பொலீஸ் 115

# இப்பொழுது வெற்றிமுரசு கொட்டி ஓடிக்கொண்டிருக்கிறது!!

மயிர்க் கூச்செறியும் வாள்ச்சண்டைகள்! காட்சிக்குக் காட்சி களிப்பூட்டும் ஹாஸ்ய வெடிகள்!! மெய்மறக்க வைக்கும் காதல் காட்சிகள்!! காதுக்கினிய கீதங்கள்!! எல்லாம் நிறைந்தது!!

சென்ட்ரல் (மருதானை) நவா (கொம்பனித்தெரு) ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரி (மட்டுநகர்) ஜோதி (திருமலை) லிபர்ட்டி (அட்டன்) றெக்ஸ் (பதுளை) ஆனந்தா (கம்பளை)

மக்கள் திலகம்

● எம். ஜி. ஆர். (5 வேடங்களில்) ● ஜெயலலிதா


அசோகன், முத்துராமன், விஜயகுமாரி, நாகேஷ், மனோரமா, எஸ். என். லட்சுமி, சீதாலட்சுமி, எம். எம். ஏ. சின்னப்பாதேவர்

—மற்றும் பலர் நடித்த—

தேவர் பிலிம்ஸ்

## தேர்த்திருவிழா

கதை தயாரிப்பு சின்னப்பாதேவர் டைரக்ஷன் எம். ஏ. திருமுகம் இசை கே. வி. மகாதேவன்



இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 எ. இலக்கத்தில் 1968-ம் வருடம் நவம்பர் மாதம் 12-ம் திகதி [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org